முச்சந்தி முரளி



"பாலியாத்தைச் சாட்டிக்கொண்டு என்னென்ன நரித்தனங்கள் செய்யப்போகினமோ"

Registered as a Newspaper
பக்கங்கள் 16 | விலை ரூ. 50


# உதயன்

சுடர் : 39
கதிர் : 24

புதன்கிழமை
20 டிசெம்பர் 2023

மார்கழி 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

# பாலியாற்றுத் திட்டம் ஜனவரியில் ஆரம்பம்



## வடக்கு வருகின்றார் ஜனாதிபதி

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 20**

**வடக்கு மாகாண மக்களின் நீண்டகால குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வைக்காணும் விதமாக, ஜனவரி மாதம் பாலியாற்று குடிதண்ணீர் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. வடமாகாணத்துக்கு வரும் ஜனாதிபதி ரணில் இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.**

15

## வடக்குப் பாடசாலைகளில் டெங்கு ஒழிப்புத் திட்டம்!

யாழ்ப்பாணம், டிசெ. 20
வடமாகாணத்தில் நிலவும் காலநிலையைக் கருத்திற்கொண்டு அனைத்துப் பாடசாலைகளிலும் டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவேண்டும் என்று வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்துள்ளார்.

15

## குளிர் காலநிலையுடன் யாழில் நேற்றும் மழை

யாழ்ப்பாணம், டிசெ. 20
வடக்கு மாகாணத்தில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மிகக் குளிரான காலநிலையுடன் நேற்றுப் பரவலாக மழை பெய்தது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் நிலவிய தீவிரமான மழை நிலை நேற்றுச் சற்றுத் தணிந்தது.

15

## பச்சிளம் சிசு திடீர்ச் சாவு!

யாழ்ப்பாணம், டிசெ. 20
பிறந்து நான்கு நாள்களேயான பச்சிளம் சிசுவொன்று, நேற்றுமுன்தினம் திடீர்ச் சாவடைந்துள்ளது.
தனியார் மருத்துவமனையொன்றில் கடந்த 14ஆம் திகதி அந்தச் சிசு பிறந்துள்ளது. இரண்டு நாள்களின் பின்னர் சிசுவுடன் பெற்றோர்

15

## எறிகணை மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 20
யாழ்ப்பாணம், திருநெல்வேலிப் பகுதியிலுள்ள வீடொன்றில் உள்ள கிணற்றிலிருந்து எறிகணையொன்று மீட்கப்பட்டுள்ளது. சந்தேகத்துக்கு இடமாகக் காணப்பட்ட பொருளை அவதானித்தவர்கள் கோப்பாய் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதையடுத்து மேற்படி எறிகணை மீட்கப்பட்டது. (அ-ம-125)

ஜனாதிபதித் தேர்தலில்

## ரணில் போட்டி!

கொழும்பு, டிசெ. 20
ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடப்போவதை, ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் உறுதிப்படுத்தியுள்ளார்.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 2023ஆம் ஆண்டுக்கான இறுதி அமைச்சரவைக் கூட்டத்தின்போது ஜனாதிபதி

15



## ரயிலில் மோதி ஒருவர் பலி!

வவுனியா, டிசெ. 20
வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்டு நபரொருவர்

15

மோசமான காலநிலை

## பலாலியை வட்டமிட்டு திரும்பிப்போன விமானம்!

யாழ்ப்பாணம், டிசெ. 20
சென்னையிலிருந்து யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கு வருகைதந்த பயணிகள் விமானம், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நிலவிய மோசமான காலநிலையைத் தொடர்ந்து, தரையிறங்க முடியாமல்

15

வட்டு. இளைஞன் படுகொலை:

## ஜனவரி 2 ஆம் திகதி விசாரணைக் கட்டளை

யாழ்ப்பாணம், டிசெ. 20
வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில், நாகராசா அலெக்ஸ் என்னும் இளைஞன் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்ட குற்றச்சாட்டில், மரண விசாரணை தொடர்பான கட்டளை ஜனவரி மாதம்

15









மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால் 10,958 பேர் பாதிப்பு

கொழும்பு, டிசெ.20

தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் 12 மாவட்டங்களில் 3 ஆயிரத்து 200 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 958 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இடர் முகாமைத்துவ நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஆயிரத்து 708 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 625 பேரும், கிழக்கு மாகாணத்தில் 863 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 52 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பாதிக்கப்பட்டவர்களைத் தங்கவைக்கும் நோக்கி இடைத் தங்கல் முகாம்களுக்காகப் பயன்படுத்துவதற்காக வடக்கு மாகாணத்தின் 16 பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 8 பாடசாலைகளுக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 பாடசாலைகளுக்கும், வவுனியா மாவட்டத்தில் ஒரு பாடசாலைக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

## செலவைக் குறைக்க பச்சைக் கம்பளங்கள்

கொழும்பு, டிசெ.20

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தனது விமானங்களின் எடையைக் குறைத்து எரிபொருள் செயற்றிறனை அதிகரிக்கும் நோக்கில் புதுமையான "பச்சைக் கம்பளங்களை" நடைமுறைப்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டமானது, அப்புறப்படுத்தப்பட்ட மீன்பிடி வலைகள், பிளாஸ்ரிக் மற்றும் துணி போன்ற மறுசுழற்சி செய்யப்பட்ட பொருள்களை உள்ளடக்கிய பிரத்தியேகமாகப் பதப்படுத்தப்பட்ட நைலோனில் இருந்து வடிவமைக்கப்பட்ட இந்த இலகுரக தரைவிரிப்புகள் குறைந்த எரிபொருள் மற்றும் நீர் உபயோகத்தில் தயாரிக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## உள்ளூராட்சித் தேர்தல் தீர்வுக்காக புதிய குழு!

கொழும்பு, டிசெ.20

உள்ளூராட்சித் தேர்தல் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டமையால் தோன்றியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான குழுவொன்றை நியமிப்பது பொருத்தமானது என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தால் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலுள்ள விதந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உடன்பாடு கிடைத்துள்ளது.

அந்தக் குழுவின் விதந்துரைகளின் அடிப்படையில் செயற்படுவதற்காக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ-இ)

## வவுணதீவில் கைதான மாணவனுக்குப் பிணை நீதிமன்று வழங்கும்?

மட்டக்களப்பு, டிசெ.20

மாவீரர்தின நிகழ்வின்போது வவுணதீவில் வைத்து கைதுசெய்யப்பட்ட உயர்தர மாணவனுக்கு நீதிமன்று பிணை அனுமதி வழங்கும் சாத்தியம் உண்டு என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தின் உத்தரவின்படி சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு மாணவனின் கோவைகள் நேற்று அனுப்பப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட நால்வருக்குப் பிணை அனுமதி பெறும் நடவடிக்கைகள் நாடாளுமன்ற உறுப்பினரின் கோரிக்கைக்கு அமைய நடைபெற்று வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)



## வாகனங்கள் பறிமுதல்

கொழும்பு, டிசெ.20

போதைப்பொருள் வியாபாரிகளுக்குச் சொந்தமான 8 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அந்த வாகனங்களின் பெறுமதி சுமார் 68 மில்லியன் ரூபா என்றும் அவர் தெரிவித்துள்ளார். சட்டவிரோத சொத்துகள் மற்றும் சொத்து விசாரணைப் பிரிவால் இந்த வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## பரிசளிப்பு நிகழ்வு மிருசுவிலில் இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 20

சாவகச்சேரி பிரதேசசபை மிருசுவில் பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மிருசுவில் றோ.க.த.க. பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி பிரதேசசபையின் செயலாளர் க.சந்திரகுமார் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேசசபையின் ஓய்வுநிலை செயலாளர் செ.சிவராஜசிங்கம், சிறப்பு விருந்தினர்களாக மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜெனசன் றொனால்ட், மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை அதிபர் திருமதி இராதிகா லெனாட் இந்திக ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-159)

## படிவம் இன்மையால் அலைக்கழியும் மக்கள்

யாழ்ப்பாணம் , டிசெ. 20

பொருத்து வீடு பெறுவதற்கான படிவம் கிடைக்கப்பெறாமையால் தினமும் பிரதேச செயலகத்துக்கு அலைக்கழிய வேண்டியுள்ளது என்று பச்சிலைப்பள்ளி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் 50 இலட்சம் ரூபா பெறுமதியான பொருத்து வீடு பெறுபவர்கள் விவரம் அண்மையில் பெறப்பட்டன. இருப்பினும் அதற்குரிய படிவம் இன்மையால் பதிவுகள் செய்யப்படவில்லை. இதனால் தினமும் பிரதேச செயலகத்துக்கு அலைய நேரிடுகிறது. யாழ். மாவட்டத்தில் படிவம் வழங்கப்படுவதால் அதனைப் பெறமுடிந்தவர்கள் அங்கு செல்லுமாறும் கூறப்படுகிறது என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொண்டபோது, "வீட்டுத்திட்டம் தொடர்பான பயனாளிகள் படிவம் இன்னமும் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்குக் கிடைக்கவில்லை. படிவங்கள் கிடைத்ததும் பதிவுகள் இடம்பெறும்" என்று தெரிவிக்கப்பட்டது. (ச-9)



## இலவச கண்புரை சிகிச்சை வவு.வில் இரண்டாம் கட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 20

வடக்கு மாகாணத்துக்கு முதற்கட்டமாக இலவச கண்புரை சத்திரசிகிச்சை திட்டம் யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இரண்டாம் கட்டம் தற்போது வவுனியாவில் முன்னெடுக்கப்படுகிறது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸின் ஆலோசனைக்கமைய '2030 ஆம் ஆண்டுக்குள் உலகில் அனைவருக்கும் பூரண கண்பார்வையை வழங்கும் நிலையான அபிவிருத்தி நோக்கு' திட்டத்தின் கீழ் இந்தச் செயற்றிட்டம் நடத்தப்படுகிறது. முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலும் கண்புரை காரணமாகப் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 200 பேருக்கு இந்த இலவச சத்திர சிகிச்சை முன்னெடுக்கப்படவுள்ளது. நாளை மறுதினம் 22 ஆம் திகதிவரை இந்த இலவச கண்புரை சத்திரசிகிச்சை முகாம் நடத்தப்படவுள்ளது. (ச-27)

மிக்ஜாம் புயல் பாதித்த

## வடசென்னை மக்களுக்கு சுவிஸ் தமிழர்கள் உதவி





சென்னை, டிசெ. 20

சென்னையில், மிக்ஜாம் புயல் காரணமாக ஏற்பட்ட பெருமழையால் கடும் பாதிப்புக்குள்ளான வடசென்னை பகுதியில் வாழும் மக்களுக்கு சுவிஸ் வாழ் தமிழர்கள் உதவிப்பொருள்கள் கையளித்து துயர்துடைத்துள்ளனர்.

சுவிட்சர்லாந்து வாழ் ஈழத்தமிழர்களின் நிதிப்பங்களிப்பில் 'உலக இந்து ஆன்மிகக் கூட்டமைப்பு' சார்பில், ஜி.கே. என்றழைக்கப்படும் வேலுப்பிள்ளை கணேச குமாரால் 150 க்கும் மேற்பட்டோருக்கான உடைகள் இதன்போது வழங்கப்பட்டன. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் பதவிக்கு வருவதை வெளிநாடுகளே தடுத்தன!

## குற்றஞ்சாட்டுகின்றார் வஜிர



கொழும்பு, டிசெ. 20

**இலங்கையைப் பலவீனமான ஒருவரே ஆளவேண்டும் என்பதே வெளி நாட்டுச் சக்திகளின் நோக்கம். ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிப் பதவிக்கு வருவதை அந்தச் சக்திகளே தடுத்தன.**

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அடுத்த 12 வருடங்களுக்கு ஆட்சி செய்வதற்குரிய அனுமதியை - ஆளும் அதிகாரத்தை நாட்டு மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கவேண்டும்.

அதன்போதே இலங்கை ஆசியாவில் பலமான நாடாக விளங்கும். இல்லாவிடின் தேசிய வேலைத்திட்டத்துடன் நாட்டை முன்நோக்கிக் கொண்டுசெல்ல முடியாது கடும் சவால் ஏற்படும்- என்றார். (ச-44)

# வரியால் வதைக்கும் அரசை விரட்டுவோம்

## சுதந்திர மக்கள் சபை அழைப்பு

கொழும்பு, டிசெ. 20

'வற்' வரியால் வதைக்கும் இந்த அரசாங்கத்தை 'பிளட்' (தரைமட்டமாக்க) ஆக்க நாட்டு மக்கள் தயாராகிவிட்டனர். இதற்கு எதிரணிகள் ஒன்றுபடவேண்டுமென சுதந்திர மக்கள் சபை அழைப்பு விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கையில்;

எதிர்காலத்தில் பரந்துபட்ட அரசியல் கூட்டணியை அமைப்பதே எமது நோக்கம். வரிச்சுமை அதிகரிப்பால் இந்த அரசை விரட்ட வேண்டும் என்ற முடிவுக்கு நாட்டு மக்கள் வந்துவிட்டனர்.

எனவே, 'சஜித் ஜனாதிபதி - அநுர பிரதமர்' என்ற கோரிக்கையை ஏற்றுப் பலமான எதிரணி கூட்டணியில் ஐக்கிய மக்கள் சக்தியும், தேசிய மக்கள் சக்தியும் இணையவேண்டும் - என்றார். (ச-44)

# வெளியுறவுக் கொள்கையில் சாதகமான மாற்றங்கள்!

கொழும்பு, டிசெ.20

இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் சாதகமான மாற்றத்துக்கான நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அமைதியை ஏற்படுத்துதல், காலநிலை மாற்றம் பல்வேறு உலகளாவிய தாக்கங்கள், இலங்கையின் சர்வதேச உறவுகளின் மூலோபாயத்தின் மைல்தூண்கள். தற்போது ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருவது அதிகரித்துள்ள நிலையில், அவர்கள் இலங்கையில் முதலீடுகளைச் செய்ய முயற்சிக்கின்றனர்- என்றார். (எ-இ)

# கிரிக்கெட்டுக்குத் தீர்வு தற்போதைக்கு இல்லை

கொழும்பு, டிசெ.20

சிறிலங்கா கிரிக்கெட்டில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு அடுத்த ஜனாதிபதித் தேர்தல்வரை தீர்வு காணமுடியாது என முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

முதலில் ஊழல் மற்றும் மோசடிகாரர்களுக்குத் தண்டனை வழங்கவேண்டும். எதிர்காலத்தில் சரியானவர்கள் நாட்டைப் பொறுப்பேற்று முன்நோக்கிக் கொண்டு செல்லவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# ரணிலுக்கு ஆதரவு



கொழும்பு, டிசெ.20

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் போட்டியிட வேண்டும். அவருக்கு நான் நிச்சயம் ஆதரவு வழங்குவேன் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் அவசியம். அடுத்த தேர்தலில் அவர் போட்டியிட்டு வெற்றிபெறவேண்டும். நாம் ஜனாதிபதி பக்கம் நிற்போம் - என்றார். (எ-44)

# கில்மிஷாவுக்கு வாழ்த்து

இந்தியாவில் தனியார் தொலைக்காட்சி அலைவரிசை நடத்திய இசைப்போட்டி நிகழ்ச்சியில் வெற்றியாளராகத் தெரிவான சிறுமி கில்மிஷாவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொலைபேசி ஊடாக வாழ்த்துத் தெரிவித்துள்ளார். அத்துடன் தனது கைப்பட எழுதிய வாழ்த்துக் கடிதத்தையும் அவர் கில்மிஷாவுக்கு அனுப்பி வைக்கவுள்ளார் (எ-இ)



# விசேட வர்த்தமானி

கொழும்பு, டிசெ.20

மின்சாரம் மற்றும் பெற்றோலியம் ஆகியவற்றை அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கும் விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்றுமுன்தினம் மாலை இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (எ-இ)

# புதினம் தெரியுமோ?



**'ஸரிகமப' எண்ட பாட்டுப்போட்டியில எங்கட யாழ்ப்பாணத்துக் கில்மிஷா வெண்ட பிறகு, எங்கட பேஸ்புக் போராளிக்குஞ்சுகள் அதை வைச்சு ஆளாளுக்கு அடிபடத் தொடங்கிட்டினம். தாங்கள் தான் கில்மிஷாவுக்கு பாட்டுச் சொல்லிக் குடுத்தமாதிரி கனபேர் கில்மிஷாவோட நிக்கிற போட்டோவைப் போட்டு ஒரு பக்கம் அலப்பறை செய்யினம். இன்னொரு பக்கம் 'கில்மிஷா ஈழத்துப் பாடகியா? இலங்கைப் பாடகியா?' எண்டு கன்னை பிரிஞ்சு நிண்டு கடும் அடிபாடு தொடங்கியிருக்கு. அந்தப்பிள்ளை சாமத்தியவீடு செய்ய வைச்சிருந்த காசில தான் இந்தியாவுக்குப் போய், கஷ்டப்பட்டு தன்ர திறமையால எல்லாரையும் வெண்டு முதலாவதா வந்திருக்கு. இனி அந்தப் பிள்ளைக்கு நிறைய வாய்ப்புகளும் வரும். ஆனால் கில்மிஷா வெண்டதைக் கூடப் பாராட்டாமல் 'ஈழமா? இலங்கையா?' எண்டு அடிபடுற கூட்டத்தைப் பாக்க அழுகிறதா சிரிக்கிறதா எண்டும் தெரியாமல் கிடக்கு. ஈழமும், இலங்கையும் ஒண்டுதான் எண்ட இழவு ஏன் இந்த அரைகுறையளுக்குத் தெரியேலை?**

**இலங்கை எண்ட பெயர் பிற்காலத்தில தான் வந்தது. அதுக்கு முதல் ஈழமெண்டுதான் இலங்கையைத் தமிழில சொல்லுறது. ஈழத்துப் பூதந்தேவனார் எண்ட புலவர் சங்க காலத்திலயே இருந்திருக்கிறார். 'ஈழத்து உணவு' கப்பலில இந்தியாவுக்குப் போனதெண்டும் பாட்டுவரியளில சொல்லுப்பட்டிருக்கு. அதால ஈழமெண்டுறது ஒட்டுமொத்த இலங்கையையும்தான் எண்டதை பேஸ்புக் போராளிக்குஞ்சுகள் புரிஞ்சு கொள்ளோணும். அதோட வெள்ளைக்காரர்தான் இலங்கையை மாவட்டங்களாப் பிரிச்சவை. அதுக்குமுதல் ஈழமெண்ட பகுதிக்குள்ள தனித்தனி ராச்சியங்கள் இருந்தது. அதுகளை இல்லாமல் செய்துபோட்டு, தான் ஆள்றதுக்கு வசதியா மாவட்டம் எண்டு பிரிச்சு இப்பத்தை குளறுபடிக்கெல்லாம் விதை போட்டது வெள்ளைக்காரர்தான். இதையெல்லாம் கூகுளில தேடிப்பார்த்தாலே விளங்கும். ஆனால் புத்தகம் எடுத்து வாசிக்கத்தான் இப்பத்தை ஆக்களுக்கு பஞ்சி எண்டு பார்த்தால் கூகிளில தேடவும் பஞ்சிப்படுகினம் போல. அதாலதான் ஈழம் வேற , இலங்கை வேற எண்டமாதிரி கம்பு சுத்திக் கொண்டு இருக்கினம்.**

**சரி, இப்ப ஏன் கில்மிஷாவை வைச்சு இப்பிடியொரு பட்டிமன்றத்தை நடத்துகினம்? வேறையென்ன , எல்லாம் வயித்தெரிச்சல்தான். எங்கட பிள்ளையொண்டு கடல்கடந்து போய், வெற்றியோட வாறதை ஏற்கிறதுக்கு சிலருக்கு மனமில்லை. 'என்னதான் இருந்தாலும் இந்திய ஆக்கள் மாதிரி எங்களிட்ட திறமையில்லை, ஏதோ இலங்கையில இருந்து போனதால, வெளிநாட்டுக் காரரின்ர சப்போர்ட் கிடைக்குமெண்டதாலதான் கில்மிஷாவுக்கு முதலாமிடம் குடுத்தவங்கள்' எண்டு சொல்லுற ஆக்கள் தான் இஞ்ச கூட. அப்பிடியானவைதான், கில்மிஷா வெண்டதை பேஸ்புக்கில வைரலாக்காமல், 'ஈழமா, இலங்கையா'எண்டு இல்லாத பிரச்சினையைக் கிளப்பி, இந்த வெற்றியை மற்றவை கொண்டாடக்கூடாது எண்டு நினைக்கினம் போல.**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்



**வாக்கியப் பஞ்சாங்கப்படி சனிபகவான் டிசெம்பர் 20 ஆம் திகதி (இன்று) மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார். 20.12.2023 முதல் 6.3.2026 வரை கும்பராசியில் சஞ்சரிக்கவுள்ளார்.**




## பாக்கிய சனி

கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்து அனைவரையும் அனுசரித்துச் செல்லும் பண்பை உடைய மேட ராசி அன்பர்களே...

இதுவரை உங்கள் ராசிக்குப் பத்தாம் வீட்டில் அமர்ந்து எந்த வேலையையும் ஒழுங்காகச் செய்யவிடாமல் முட்டுக் கட்டை போட்ட சனிபகவான் இப்போது நகர்ந்து பாக்கியஸ்தானம் எனப்படும் 11ம் வீட்டுக்குள் அடியெடுத்துவைக்கிறார். சனி பகவான் கும்ப ராசியில் 20.12.23 முதல் 6.3.2026 வரை சஞ்சரிக்க உள்ளார். இந்த அமைப்பு உங்களுக்கு அபரிமிதமான பலன்களை வழங்க இருக்கிறது.

சோர்வும் சோகமும் ஓடி மறையும். சுறுசுறுப்பாவீர்கள். மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கும். தீர்க்கமாக முடிவெடுப்பீர்கள். எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரும். பணம் பல வகைகளிலும் வரும். எவ்வளவு பணம் வந்தாலும் சேமிக்க முடியாத நிலை இருந்ததே. அது மாறும்.

குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கும். கணவன் - மனைவிக்குள் இருந்த பூசல்கள் விலகும். ஒருவருக்கொருவர் கலந்துபேசி பிரச்சினைகளைத் தீர்ப்பீர்கள். உங்கள் மனதுக்குப் பிடித்தமான வீடு, மனை அமைய வாய்ப்புண்டு. குழந்தைப் பாக்கியம் எதிர்பார்த்துக்காத்திருந்த தம்பதிகளுக்கு அந்தப் பாக்கியம் கிட்டும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் களைகட்டும். மகன் அல்லது மகளுக்கு அயல்நாட்டில் உயர்கல்வி அமையும்.

உங்கள் ராசியை சனிபகவான் பார்ப்பதால் தேவையற்ற கோபமும் சலிப்பும் ஏற்படும். உடலில் அலர்ஜி போன்ற தொந்தரவுகள் வரக்கூடும். ஆனாலும் மனதில் துணிச்சல் அதிகரிக்கும். முக்கியமான முடிவுகளைத் தைரியமாக எடுப்பீர்கள். உணவு விடயத்தில் கவனம்தேவை. அஜீரணம்முதலானஉபாதைகள் ஏற்படலாம். நரம்பு சம்பந்தமான பிரச்சினைகளிலும் கவனம் தேவை. சனிபகவான் உங்களின் ராசிக்கு 5 ஆம் வீடான சிம்மத்தைப் பார்ப்பதால் குழந்தைகளின் நலனில் அக்கறை தேவை. அவர்களின் படிப்பில் உரிய கவனம் செலுத்துங்கள். சனிபகவான் உங்களின் 8 ஆம் வீடான விருச்சிகத்தைப் பார்ப்பதால் தூர தேசப் பயணம் அமையும். இந்தக் காலகட்டத்தில் பயணத்தின்போது கவனம் வைக்க வேண்டியது அவசியம்.

**வியாபாரம்:** தொழில் சூடுபிடிக்கும். இதுவரை விற்காமல் தேங்கியிருந்த பொருள்களை விற்றுத் தீர்ப்பீர்கள். பணியாளர்கள் கூடுமானவரை ஒத்துழைப்புத் தருவார்கள். லாபம் அதிகரிக்கும்.

**உத்தியோகம்:** நிர்வாகத் திறமை கூடும். உங்கள் ஆலோசனை பாராட்டப்படும். சக ஊழியர்கள் உங்களுக்கு ஒத்துழைப்பு தருவார்கள்.

எதிர்பார்த்த பதவி உயர்வு ஊதிய உயர்வு கிடைக்கும். மறுக்கப்பட்ட சலுகைகள் கிடைக்கும். தகவல் தொழில் நுட்பத்துறையில் பணிபுரியும் நபர்களுக்குப் புதிய வேலையும் வேலைபார்க்கும் இடத்தில் நல்ல சம்பளமும் சலுகைகளும் கிடைக்கும்.

**மொத்தத்தில் இந்தச் சனிப்பெயர்ச்சி திக்கித் திணறித் தவித்துக் கொண்டிருந்த உங்கள் வாழ்வில் திருப்பத்தைத் தருவதாக அமையும்.**

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.



**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.



**மிதுனம்:** நன்மைகள் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.



**கடகம்:** எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய நாள். முக்கியமான முடிவுகள் எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.



**சிம்மம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்களால் குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.



**கன்னி:** மனக்கசப்புகள் நீங்கும். சுபச்செலவு ஏற்படும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. வழிபாடு நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும். அலைச்சல் உண்டாகலாம். வீண் எதிர்பார்ப்புகளை தவிருங்கள்.



**துலாம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். எதிர் பார்த்த பணஉதவி கிடைக்கும். உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்பு கிடைக்கும். குடும்ப உறுப்பினர்களிடையே மரியாதை அதிகரிக்கும்.



**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். அந்நியோன்யம் அதிகரிக்கும். மன உறுதியுடன் செயற்படுவீர்கள்.



**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். சில சங்கடங்கள் ஏற்படும். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது. பேசும்போது பொறுமை அவசியம்.



**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். விற்பனையும் லாபமும் தளைக்கும்.



**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்க வேண்டாம்.



**மீனம்:** புதிய முயற்சிகளை தொடங்கலாம். முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு. பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும். சங்கடங்கள் நீங்கும்.

# மதிப்பளிப்பும் நூல் வெளியீடும்

கிளிநொச்சி, டிசெ. 20

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் 'பசுந்துளிர் இல- 8' நூல் வெளியீடும் கலைஞர்கள் மற்றும் வெற்றியாளர்கள் மதிப்பளிப்பு நிகழ்வும் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையில் பிரதேச செயலகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து இந்த நிகழ்வை நடத்துகின்றன. (ச-9)

# அ.அட்டை ஒளிப்பட கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.20

அடையாள அட்டை அல்லது நகல் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் நபரின் ஒளிப்படத்தை டிஜிற்றல் வடிவில் நகல் எடுப்பதற்கு பதிவுக் கட்டணமாக ஒளிப்படக் கலைஞரால் வசூலிக்கப்படும் அதிகபட்ச கட்டணம் 400 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கு முன்பு அதிகபட்சமாக 150 ரூபாவாக வசூலிக்கப்பட்டது. 2016ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்த கட்டணம் இரத்துச் செய்யப்படுகின்றது என்று தெரிவித்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது. (எ-இ)

# வெளிநாட்டுக்கு செல்லும் தாய்மாருக்கு கட்டுப்பாடு

கொழும்பு, டிசெ.20

5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளைக் கொண்ட பெண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் செல்வதைத் தடுக்கும் சட்டத்தை மீள நடைமுறைப்படுத்த நாடாளுமன்றக் குழு பரிந்துரைத்துள்ளது.

தாயின் கவனிப்பு இன்றி 5 வயதுவரை வளரும் பிள்ளைகளுக்கு ஏற்படும் பாதிப்பு அடுத்த 20 முதல் 25 ஆண்டுகளுக்கு சமூகத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-இ)

# சிறை பஸ்களில் சி.சி.ரி.வி.

கொழும்பு, டிசெ.20

சிறைச்சாலை பஸ்களில் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும், பஸ்ஸில் அல்லது நீதிமன்றத்துக்கு கைதிகளை அழைத்துச் செல்லும் சிறைச்சாலை பஸ்களில் கமராக்களைப் பொருத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்தார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலைத் தோட்ட விவசாயக் கண்காட்சி

யாழ்ப்பாணம், டிசெ. 20
சாவகச்சேரி, அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்தின், தொழில் முனைவுடன் கூடிய பாடசாலைத் தோட்டத்தின் விவசாயக் கண்காட்சி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பாடசாலை அதிபர் திருமதி தேவரதி சுதேஸ்கரன் தலைமையில் இடம்பெற்றது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் பங்கேற்றார். (ச-159,27)



ஊரெழு மடத்துவாசல் சுந்தரபுரி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய விநாயகர் விரத கஜமுக சங்கார உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-66)




# நத்தார் விழா

யாழ்ப்பாணம், டிசெ. 20
செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் கிறிஸ்தவக் கழகம் நடத்திய வருடாந்த நத்தார் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் கலட்டியில் இடம்பெற்றது.
கழகத் தலைவர் ஈ.திருக்கோணேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சிறுவர்கள் உட்பட 150 பேருக்கான கற்றல் உபகரணங்கள் பரிசில்களாக வழங்கப்பட்டன. (ச-66)



# கூட்டுறவாளர்தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 20
சுன்னாகம் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய 101ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின நிகழ்வுகள் கடந்த வாரம் இடம்பெற்றன.
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் கலந்துகொண்டு சிறந்த கூட்டுறவாளர்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (ச-17)



ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை என்பவற்றில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு மற்றும் பரிசில் வழங்கும் நிகழ்வு கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச-17)

# கஜமுக சங்காரம்




புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலய கஜமுகசூர சங்ஹாரத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை அடியவர்கள் சூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-66)



# நடமாடும் சேவையில் பிறப்புச் சான்றிதழ்கள்

வவுனியா, டிசெ. 20
பிறப்புச் சான்றிதழைப் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதையடுத்து வவுனியாவில் நடமாடும் சேவை மூலமாகப் பதிவுசெய்யப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.
வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நடமாடும் சேவையில் 58 பேருக்கான பிறப்புச் சான்றிதழ்கள் கையளிக்கப்பட்டன.
இதன்போது வடக்கு மாகாண பிரதிப்பதிவாளர் நாயகம் திருமதி ஆனந்தி ஜெயரட்ணம், வவுனியா பிரதேச செயலாளர் நா. கமலதாசன், உதவிப் பிரதேச செயலாளர், வவுனியா மாவட்டப் பதிவாளர் உட்பட பலர் பங்கேற்றிருந்தனர். (ச-110)



# குரும்பசிட்டி முத்துமாரி மஹோற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 20
குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.
தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் மஹோற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை சப்பரத் திருவிழாவும், மறுநாள் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் தீர்த்தவாரி உற்சவமும் இடம்பெறவுள்ளன என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் நலனில் அக்கறை செலுத்துங்கள்

## போக்கட்டி அ.த.க. பாடசாலை அதிபர் அறிவுரை

கொடிகாமம், டிசெ. 20

பாடசாலைக்குப் பிள்ளைகளைத் தள்ளிவிட்டால்போதும் என்ற மனநிலையை நீங்கள் மாற்றி உங்கள் பிள்ளைகள் மீது பெற்றோர் கரிசனை காட்டவேண்டும். நாளும் பொழுதும் உங்கள் பிள்ளைகளின் கற்றலிலே அக்கறை செலுத்துங்கள். பாடசாலை வெறுமனே 6 மணித்தியாலங்கள் தான் உங்கள் பிள்ளைகளோடு பழகுகின்றது. சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்பதற்கிணங்க உங்கள் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம்முடையதே.

இவ்வாறு போக்கட்டி அ.த.க. பாடசாலையில் புலமைச் சாதனையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் உரையாற்றுகையில் பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எங்களுடைய பாடசாலைகளில் இலவசக் கல்வி இருக்கிறது இருந்தாலும் 70 வீதமான மாணவர்கள் மாத்திரமே சித்தியடைகிறார்கள். அறிவு மையக் கல்விக்கு அப்பால் திறன்விருத்திக் கல்வி பற்றிச் சிந்திக்கவேண்டிய தேவை இருக்கிறது. இந்த மாணவர்களின் நடத்தைக் கோலங்கள் விருத்தி செய்யவேண்டிய தேவை நமக்குள்ளது.

மாணவர்களின் உடல், உள ஆரோக்கியத்தில் அக்கறைவேண்டும். சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்பது போல உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல போஷாக்கான உணவை வழங்குங்கள். அவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாருங்கள் - என்றார். (எ-ரி-159)



# அதிபரின் முயற்சியில் முக்கொம்பனில் பாலம்

கிளிநொச்சி, டிசெ. 20

பாலம் இல்லாது வெள்ளநீரால் அவதியுறும் மாணவர்களின் அவலத்தைப் போக்குவதற்கு முக்கொம்பன் மகா வித்தியாலய அதிபரின் முயற்சியில் புதிய பாலம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

கண்ணகைபுரம் கிராமத்திலிருந்து பூநகரி முக்கொம்பன் மகா வித்தியாலயத்துக்கு சிறுகுளமொன்று குறுக்கறுத்து ஓடும் வெள்ளநீர் பகுதியூடாகவே பெரும் சிரமங்களின் மத்தியில் மாணவர்கள் வந்துசென்றனர்.

அதையடுத்து வித்தியாலய அதிபர் புலம்பெயர்ந்து நாட்டில் வாழும் பொறியியலாளர் சர்வேஸ்வரனிடம் விடுத்த கோரிக்கைக்கமைய புதிய பாலமொன்று அமைத்துகொடுக்கப்பட்டுள்ளது.

தற்போது மாணவர்கள் புதிய பாலம் வழியாகப் பாடசாலைக்கு பாதுகாப்பாக வந்துசெல்கின்றனர். (ச-13)



# ஆண் அதிபரை நியமிக்கக்கோரி நறுவிலிக்குளத்தில் போராட்டம்

மன்னார், டிசெ.20

மன்னார், நறுவிலிக்குளம் பாடசாலைக்கு ஆண் அதிபர் ஒருவரை நியமிக்கவேண்டும் என்று தெரிவித்து பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும், பெற்றோரும் இணைந்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் தெரிவித்ததாவது:-

எமது பாடசாலை நீண்டகாலமாக 15 பெண் ஆசிரியர்களையும், ஒரு ஆண் ஆசிரியரையும் கொண்டு இயங்குகின்றது. இந்தப் பாடசாலைக்குத் தகுதி வாய்ந்த ஆண் அதிபர் ஒருவரை நியமிக்கவேண்டும் என்று பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளோம். நியமிக்கப்பட்டுள்ள பெண் அதிபரைக் குறைகூறவில்லை. பாடசாலையை முன்நோக்கிக் கொண்டு செல்ல ஆண் அதிபர் ஒருவரே பொருத்தமானவர் என்று கருதுகின்றோம். அதிகாரிகள் எமது பாடசாலைக்கு ஆண் அதிபர் ஒருவரை நியமிக்கவேண்டும் - என்றனர்.

அதேவேளை, பாடசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ள பெண் அதிபர் நேற்று பதவியேற்கவிருந்த நிலையிலேயே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-213)

# சாவ. இந்துக் கல்லூரி பரிசில் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 20

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பரிசில் நாள் நிகழ்வு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை இரு அமர்வுகளாக கல்லூரி முதல் ந.சர்வேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

முதல் அமர்வு காலை 9 மணிக்கும் இரண்டாம் அமர்வு பிற்பகல் 2.30 மணிக்கும் பாடசாலையின் அருணாசலம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. (ச)

# சர்வதேச மனக்கணிதப் போட்டி வெற்றியீட்டியவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 20

மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச மட்ட மனக்கணிதப் போட்டியில் முதலிடம் பெற்றுச் சம்பியனான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவன் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வு யாழ்.நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கோசலை மதன், சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி காயத்திரி கோகுலன் ஆகியோர் பங்கேற்று வெற்றியீட்டிய மாணவனுக்கு 50 ஆயிரம் ரூபா பணப்பரிசை வழங்கிக் கௌரவித்தனர். (ச-100)




5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 . 08 . 1954

மறைவு 16 . 12 . 2018



அமரர் கணபதி தனபாலசிங்கம்

ஆண்டுகள் ஐந்து ஆயிடினும்
அன்பு முகம் மறக்கவில்லை
என்றும் உம் நினைவாய்
இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டா மணிவிளக்காய்
ஒளிவீசிப் பிரகாசித்தீர்
இன்று வேண்டித் துதித்தே
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(CS 27429) S-1

# ஒளிவிழாவும் சேவைநலன் பாராட்டும்

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் ஒளிவிழாவும் சேவை நலன் பாராட்டும் இன்று புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு ச.லோகசிவம் தலைமையில் சங்க கேட்போர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் முதன்மை விருந்தினராகவும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் யோ.ஜெகதாஸ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-17)




பளை, தர்மக்கேணி அ.த.க.பாடசாலையின் ஒளிவிழா அதிபர் வே.செல்வகுமார் தலைமையில் கடந்த திங்கட்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வாய்ப்பந்தல்கள் தேவையில்லை

பாடசாலைச் சுற்றாடலில் மாணவர்களுக்குத் தீங்கான எந்தச் செயற்பாட்டுக்கும் இடமளிக்கப்பட மாட்டாது என்று பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்திருக்கின்றார். அதற்கான விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மாணவர்கள் தவறான பாதையில் செல்வதைத் தடுக்க, இன்றைய காலப்பகுதியில் இந்த நடவடிக்கை நிச்சயம் அவசிய மானது. போதைப்பொருள் வியாபாரிகளால் மாணவர்களே 'இளம் வயதினரே' அதிகம் இலக்கு வைக்கப்படுகின்றனர். வடக்கு மாகாணத்திலும் இந்த அபாய நிலைமை இருக்கின்றது. பாடசாலைகளுக்கு அருகில் கடந்த காலங்களிலும் போதைப்பொருள் வியாபாரிகள் கைது செய்யப்பட்டிருந்தனர். ஆனாலும் மாணவர்களை இலக்கு வைத்துச் செயற்படும் போதைப்பொருள்வியாபாரத்தைக்கட்டுப்படுத்துவது இயலாத காரியமாகவே இருக்கின்றது.

பாடசாலை மாணவர்களை இலக்குவைத்துச் செயற்படும் போதைப்பொருள் வலைப்பின்னல் கண்டுபிடிக்கப்படவில்லை. எய்தவர்கள் தப்பிக்க அம்புகள் மட்டுமே சிக்கியிருக்கின்றன. ஒருவரைக் கைதுசெய்து நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வதுடன் பொலிஸார் தங்கள் கடமையை முடித்துக் கொள்கின்றனர். கைது செய்யப்பட்டவருக்குப் போதைப்பொருள் எவ்வாறு கிடைத்தது என்பது பற்றியோ, போதைப்பொருளை விநியோகிப்பவர் தொடர்பாகவோ விசாரணை நடத்தி அந்த வியாபாரச் சங்கிலியைக் கண்டறிய முயற்சிப்பதில்லை அல்லது எதற்கு வேண்டாத வேலை என்று ஒதுங்கிக் கொள்கின்றனர்.

இந்தச் சட்டவிரோத நடவடிக்கைகளின் மூலவேரைக் கண்டறிந்து அகற்றாது எந்த விசேட நடவடிக்கையும் பயன்தரப்போவதில்லை. வடக்கு மாகாணத்தில் பாடசாலைகளுக்கு அருகில், தனியார் கல்வி நிலையங்களுக்கு அருகில் போதைப்பொருள் விற்பனை நடப்பது பொதுமக்களுக்கே தெரியும் நிலையில் பொலிஸார் இதை அறியாமல் இருக்கப் போவதில்லை. மாவா போன்ற போதைப்பொருள்கள் மாணவர்களுக்கு மிக இலகுவாகவே கிடைக்கின்றன. வடக்கு மாகாண பொலிஸ் அதிகாரிகள் கடந்த காலங்களில் தனியார் கல்வி நிலையங்கள் உள்ள பகுதிகளில் பொலிஸ் ரோந்து உட்படப் பல திட்டங்களை நடைமுறைப்படுத்துவதாகக் கூறியபோதும், அவை எல்லாமே வெறும் வாய்ப்பந்தல்களாக இருந்தனவேதவிர உருப்படியான வகையில் செயற்பாட்டுக்கு வரவில்லை. அப்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் தமது தலைகள் உருளாதிருப்பதற்காக பொலிஸ் அதிகாரிகள் இத்தகைய திட்டங்களை அறிவித்த கையோடயே அவற்றை மறந்தும் விடுகின்றனர். இந்த நிலைமை இருக்கும்வரையில் போதைப்பொருள்களை, சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது இயலாத காரியமாகவே இருக்கும். பதில் பொலிஸ்மா அதிபரின் நோக்கம் காலப்பொருத்தமானதுதான், ஆனால், அது நடைமுறைக்கு வந்தால் மாத்திரமே பயனுள்ளதாக இருக்கும். இல்லையேல் இதுவும் பத்தோடு பதினோராவது வாய்ப்பந்தலாக மாறிவிடும்.




# ஊழலை அரசு தடுக்காவிடில் 5 ஆண்டுகளில் மீள நெருக்கடி

கொழும்பு, டிசெ.20

**நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு அரச மற்றும் ஊழல் எதிர்ப்பு மறுசீரமைப்புகள் இன்றியமையாதவை. அவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கப்படாவிட்டால் அடுத்த 5 ஆண்டுகளில் இலங்கை மீண்டும் கடன் நெருக்கடியில் சிக்கும் என்று 'பொருளாதார மீட்சிக்கான ஊழல் எதிர்ப்புச் சீர்திருத்த சிவில் சமூகக் கூட்டமைப்பு' எச்சரித்துள்ளது.**

இலங்கை தொடர்பான சர்வதேச நாணயநிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மறுசீரமைப்பு யோசனைகளைப் பெரிதும் வரவேற்கின்றோம். அதில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழலுக்கு எதிரான முக்கியமான நடவடிக்கைகள் போன்றவற்றைக்கூட அரசாங்கம் இன்னமும் நடைமுறைப்படுத்தவில்லைஎன்றும் அந்தக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. ஊழலைமுடிவுக்குக்கொண்டு வருவதற்கான செயற்றிட்டங்களைப் புறக்கணிக்கும் அணுகுமுறையை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம் என்றும் அந்தக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (எ-இ)

## கீரிச் சம்பாவுக்கு பதில் 'ஜிஆர் 11'

கீரிச்சம்பா அரிசிக்குப் பதிலாக 'ஜிஆர் 11' அரிசியை இறக்குமதி செய்யத் தனியார் துறைக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இந்த அனுமதிக்கு ஏற்ப 50 ஆயிரம் மெற்றிக்தொன் 'ஜிஆர் 11' வகை அரிசி இறக்குமதி செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. சந்தையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதற்காக, உணவுக் கொள்கைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## சமூகப் பிரச்சினையாகும் சிறுவர் துஷ்பிரயோகங்கள்

நாட்டில் பெண் மற்றும் ஆண் பிள்ளைகள் இருபாலாரும் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாகும் சாத்தியம் அதிகரித்துள்ளது என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பதின்மவயதுச் சிறுமிகள் தாயாக மாறும் நிலையானது ஒரு தீவிரமான சமூக மற்றும் சட்டப் பிரச்சினையாக மாறியுள்ளது. கடந்த நவம்பர் மாதம் மாத்திரம் 10 சிறுமிகள் கர்ப்பமடைந்துள்ளனர் என்று பொலிஸாரின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. கடந்த வருடத்தில் மாத்திரம் 2 ஆயிரம் பதின்மவயதுத் தாய்மார் பதிவாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# உடைமையில் ஹெரோய்ன் நபரொருவர் கைதானார்!

யாழ்ப்பாணம், டிசெ. 20

ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நெல்லியடிப் பகுதில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே மேற்படி இளைஞர் கைது செய்யப்பட்டார். (ம-23)

## நாளை

21.12.2023
வியாழக்கிழமை
மார்கழி 05

சுபநேரம் : 07.54 - 09.24
ராகுகாலம் : 01.54 - 03.24

## நாளொரு நல்வார்த்தை

செயலின்மை, சந்தேகம் மற்றும் அச்சத்தைத் தரும்;
செயல்பாடு, நம்பிக்கை மற்றும் தைரியத்தைத் தரும்.
-டேல் கார்னெகி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொடரும் காடழிப்பால் உவராகும் முக்கொம்பன்

## கிராம மக்கள் வேதனை

**கிளிநொச்சி, டிசெ. 20**
**கிளிநொச்சி, பூநகரி - முக்கொம்பனில் தொடர்ச்சியாக காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் முக்கொம்பன் கிராமம் உவரடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:
2010ஆம்ஆண்டுமுதல்தொடர்ச்சியாக முக்கொம்பனிலிருந்து மரங்கள் வெட்டப்பட்டு வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. இதுதொடர்பாக முறைப்பாடுகள் பல அளிக்கப்பட்டபோதிலும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

பூநகரி பிரதேசம் உவரடைந்து வரும் நிலையில் முக்கொம்பன், கரியாலைநாகபடுவான், ஜெயபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள காடுகளைப் பாதுகாப்பதன் மூலமே உவர் பரம்பலைக் கட்டுப்படுத்த முடியும்.
எனவே உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி காடுகள் அழிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்- என்றனர். (ச-13)

## திருட்டுச் சம்பவம் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.20
திருட்டுப் பொருள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
காரைநகர் பகுதியில் திருடப்பட்ட மின்மோட்டார், ஒலிசாதனம் என்பவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டிலேயே 20 வயதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

# உடைமையில் கஞ்சா யாழில் பலர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ.20
மீசாலை தெற்கைச் சேர்ந்த 19 வயது இளைஞர் ஒருவரிடம் இருந்து ஆயிரத்து 500 மில்லிகிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

⊗ ⊗ ⊗ ⊗

அல்லாரை தெற்கில் 350 மில்லிகிராம் கஞ்சாவுடன் 17 வயதுச் சிறுவன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

⊗ ⊗ ⊗ ⊗

வடக்கு மாகாணசபை முன்பாக இருவர் உடைமையில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர். 24 மற்றும் 41 வயதான இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-125)

⊗ ⊗ ⊗ ⊗

ஊர்காவற்றுறை நாரந்தனையில் 300 கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-125)

⊗ ⊗ ⊗ ⊗

அல்லைப்பிட்டியில் குடும்பஸ்தர் ஒருவர் ஆயிரத்து 800 மில்லிகிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

⊗ ⊗ ⊗ ⊗

கச்சாயில் கஞ்சா சுருட்டுடன் இருவர் வெவ்வேறு இடங்களில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். 19 மற்றும் 20 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-125)

⊗ ⊗ ⊗ ⊗

சுழிபுரம், வறுத்தோலைப் பகுதியில் இரு இளைஞர்கள் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர். வறுத்தோலையில் 2 கிராம் கஞ்சாவுடன் ஒருவரும், காட்டுப்புலத்தில் 3 கிராம் கஞ்சாவுடன் இன்னொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-125)

# கடை உடைத்துத் திருட்டு ஐவர் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், டிசெ.20
வவுனியாவில் வர்த்தக நிலையங்களை உடைத்துத் திருடிய குற்றச்சாட்டில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.
பசார் வீதியில் கடைகள் உடைக்கப்பட்டுப் பொருள்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பாகவே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
அதேவேளை, வவுனியா இரண்டாம் குறுக்குத்தெரு மற்றும் அதை அண்டிய பகுதியில் நிறுத்தப்படும் வாகனங்களின் பக்கக் கண்ணாடிகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக பொதிகள் சேவை நிறுவனம் ஒன்றின் முகாமையாளர் பிரதான சந்தேகநபராக இனங்காணப்பட்டுக் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-110)

## கொட்டும் மழையால் மாணவர் வரவு குறைவு

யாழ்ப்பாணம், டிசெ.20
வடமராட்சியில் நேற்று முன்தினம் இரவு பெய்த கடும் மழை காரணமாக பாடசாலைச் செயற்பாடுகள் முடங்கியுள்ளன.
வடமராட்சிப் பிரதேச பாடசாலைகளில் மாணவர்களின் வருகையும் மிகக் குறைவாகவே காணப்பட்டது. (எ-100)

# இளைஞர் கைது



யாழ்ப்பாணம், டிசெ.20
30 போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட் டில் மானிப்பாய், சுழாவடியில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (எ-125)

# இரணை மடுவில் கொட்டி[illegible]து மழை

கிளிநொச்சி, டிசெ.20
கிளிநொச்சி, இரணைமடுவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் நேற்றுமுன்தினம் [illegible]ங்கட்கிழமை காலை 8.30 மணிவ[illegible]பான 24 மணிநேரத்தில் 130 மி[illegible]மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுளளது என்று திருநெல்வேலி வானிலை [illegible]அவதான நிலையப் பொறுப்பதிகாரி ரி பிரதீபன் தெரிவித்தார்.
அக்கராயனில் 99.1 மில்லி[illegible]றர் மழையும், கிளிநொச்சி நகரில் 93.1 மில்[illegible]மீற்றர் மழையும், ஆனையிறவில் 2[illegible]3 மில்லிமீற்றர் மழையும், பூநகரில் [illegible].0 மில்லிமீற்றர் மழையும் பதிவாகி[illegible]ாது என்றும் அவர் குறிப்பிட்டார். ([illegible]66)

# உடைமையில் கசிப்பு சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், டிசெ.20
கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஊர்காவற்றுறை நாரந்தனையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
அவரிடம் இருந்து 180 மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

⊗ ⊗ ⊗ ⊗

காரைநகரில் கோடாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 30 வயது இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 25 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கான உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

⊗ ⊗ ⊗ ⊗

கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூளாயில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

## மாணவருக்கு சத்துணவு

கிளிநொச்சி, டிசெ. 20
உலக உணவுத் திட்ட நிறுவன ஏற்பாட்டில் பச்சிலைப்பள்ளி பிரதேச பாடசாலைகளுக்கு முட்டைகள் வழங்கப்படவுள் ளன.
ஜனவரி மாதம் தொடக்கம் இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ச- 9)

# பச்சிலைப்பள்ளியில் 2 கட்டங்களாக வீடு!

கிளிநொச்சி, டிசெ. 20
பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இந்த வருட வீடமைப்புத் திட்டத்தில் பத்துப் பயனாளிகளுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படவுள்ளது.
முதற்கட்டமாக 4 வீடுகளும் இரண்டாம் கட்டத்தில் 6 வீடுகளும் கிடைத்துள்ளன. 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஒன்பது வீடுகளும் 6 இலட்சம் ரூபா பெறுமதியான ஒரு வீடுமே வழங்கப்படவுள்ளன. கிளாலி, மாசார், கச்சார்வெளி, வேம்பொடுகேணி மற்றும் முகமாலை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கே இந்த வீடமைப்புத் திட்டம் கிடைக்கப்பெற்றுள்ளது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை

"பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
நட்டார்கட் செய்தலிற் றீது." - வள்ளுவர்






# முத்தமிழும் சங்கமித்த வவுனியா கலாசாரவிழா

பா.குமுதன்

பண்பாடு கலாசாரம், என்பது மக்களின் வாழ்வியல் முறைகளையும், அவர்களது எண்ணங்களையும் செயல்களையும் உள்ளடக்கியது. ஒவ்வொரு மனிதக்குழுவும் தமக்கென சில தனித்துவமான மரபுகளையும், கட்டமைப்புகளையும் கொண்டிருக்கக் காண கிறோம். அந்தக் கட்டமைப்பில் அவர்களால் கொண்டாடப்படும் விழாக்கள் முக்கியமான பங் காற்றுகின்றன. அவை ஒவ்வொரு குழுவினதும் கலாசாரங்களை, விழுமியங்களை பறைசாற்று வதை அவதானிக்கமுடியும். இவை அந்த மக்க ளின் தொடர்ச்சியான இருப்புக்கும், வரலாற்றுத் தொடர்ச்சிக்கும் அடித்தளம் இடுகின்றன.

அந்தவகையில் பிரதேசங்கள் தங்களுக்கு ரிய கலை கலாசார பண்பாட்டம்சங்களை வெளிப்படுத்தும் விதமாக வடக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் வவு னியா பிரதேசசெயலகம் மற்றும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய வவுனியா 'பிரதேச கலாசாரவிழா 2023' அண்மையில் இடம்பெற்றது.

பிரதேசசெயலாளர் நா.கமலதாசன் வழிகாட்ட லில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக முனைவர் மேழிக்குமரன், ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் கந்தையா ஐயம்பிள்ளை ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மங்கள இசைமுழங்க விருந்தினர்கள், கலை ஞர்கள் நிகழ்வு மண்டபத்துக்கு அழைத்து வரப் பட்டதுடன் தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. நிகழ்விற்கான தலைமை உரையை சு.ஜெயச்சந்திரன் நிகழ்த்த வரவேற்பு ரையை தமிழருவி த.சிவகுமாரன் வழங்கினார். வரவேற்பு நடனத்தை லலிதகலாலய மாணவர் கள் வழங்கியிருந்தனர்.




மண்டபத்தில் விசேடமாக அலங்கரிக்கப்பட்ட மேடையில் கலைநிலா கலையகம் வழங்கிய அரங்காற்றுகை, கவியரங்கம், ஓமந்தை கலா சார நிலைய மாணவர்கள் வழங்கிய கொற்றவை நடனம், சிங்களக் கிராமியநடனம், நிருத்த கலா சேத்திர மாணவர்கள் வழங்கிய தமிழ் மறவர்கள் நடனம், கிராமிய இசை போன்றவை பார்ப்பவர் கண்களுக்கு விருந்தளித்தன.



அதனைத் தொடர்ந்து வவுனியாவின் வாழ்வியல் மரபுகளை உள்ளடக்கிய 'வவுனியம் 7' கலை இலக்கியப் பண்பாட்டு மலர் வெளியிடப்பட்டது. 50 ஆக்கங்களைத் தாங்கிவந்த அந்த நூல் வரலாற்று ஆவணமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. நூலை பிரதேச செயலாளர் நா.கம லதாசனும், கலாசார உத்தியோகத்தர் அபிராமியும் வெளியிட்டுவைக்க முதற்பிரதியை கந்தையா ஐயம்பிள்ளை பெற்றுக்கொண்டார். நூலுக் கான வெளியீட்டுரையை கலாசார உத் தியோகத்தர் வழங்க, ஆய்வுரையை ஆசிரியர் சி.வரதராஜன் வழங்கியிருந் தார். குறித்த நிகழ்வின் அரங்குக்கு மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்கவாசகம் என பெயர் சூட்டப்பட்டிருந்தமை நிகழ்வை மேலும் மெருகூட்டியது. தொடர்ச்சியாக வவுனியா பிரதேசத்தில் மொழி, கலை, இயல், இசை நாடகத்துறையில் பங்களிப்புச் செய்தவர்களுக்கான 'கலாநேத்ரா' விருது வழங் கிவைக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.



அந்தவகையில் கவிதைக்கான விருதை நாக லிங்கம் தியாகராஜாவும், வாத்திய இசைக்கான விருதை செந்தில்மதி பரமசிவராஜாவும், இயலுக் கான விருதை சிதம்பரப்பிள்ளை வரதராஜனும், நாடக எழுத்துருக்கான விருதை கந்தையா ஸ்ரீகந்தவேளும், கட்டுரைக்கான விருதை வீர சிங்கம் பிரதீபனும், மெல்லிசைக்கான விருதை [illegible] ஜெயச்சந்திரனும், நாடக இலக்கி யத்துக்கான விருதை விஷ்ணுராஜ் விஜயகுமா ரும், நடனத்துக்கான விருதை சர்மினி டனிஸ் கரனும், [illegible]க்கான விருதை பாலநாதன் சத்சனும் பெற்றுக்கொண்டனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையில் சிறப்புற்ற பண்பாட்டுப் பெருவிழா





முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், வடமாகாண பண்பாட்டுத் திணைக்களம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களம் இணைந்து நடத்திய மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா மாவட்டச்செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் கரைதுறைப்பற்று பிரதேசசபை கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் தலைவர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகவும், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன் மற்றும் பிரதேச மூத்த கலைஞர்களும் சிறப்பு விருந்தினர்களாகவும் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் க.கனகேஸ்வரன் விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பல்வேறுபட்ட கலைநிகழ்வுகள், அதிதிகளின் உரைகள் இடம்பெற்றதுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 மூத்த கலைஞர்களுக்கு 'முல்லைக் கலைக்கோ' விருதும், 6 இளம் கலைஞர்களுக்கு 'முல்லை இளஞ்சுடர்' விருதும் வழங்கப்பட்டன.







**அன்ரன் அருள்வண்ணன்**

# வீழ்ந்துகிடக்கும் வணங்கா மண்!



எல்லாப் பயிர்நிலங்களிலும் விளைச்சலை எதிர்பார்த்து பயிர்செய்கை செய்யப்படுகிறது. இருப்பினும் களையும் வளர்ந்து தலைதூக்கும். கண்ணுக்கெட்டிய மறுகணமே வேரறுத்து எறிவான் உண்மையான விவசாயி. ஆனால் யாழ். மண்ணில், வடக்கில் எமது கண்களுக்குப் புலப்படுவது களைகள் காக்கப்படுதலும், களைகள் ஊக்கப்படுதலும்தான். இதன் விளைவாக உலகெங்கும் கல்வியில், வீரத்தில், ஒழுக்கத்தில் தலைநிமிர்ந்து நின்ற வணங்காமண் வடக்கு தற்போது தலைகுனியத் தொடங்கியிருக்கின்றது.

**பொலிஸாரின் அசமந்தம்**

நன்மையும் தீமையும் ஒருங்கே இருக்கமுடியாது. தீமை எப்போதும் நன்மையைக் குறித்துப் பயப்படும். தீயவர்கள் நன்மை செய்பவரை அல்லது நீதிமானை நெருக்குவார்கள். கையூட்டு வாங்கி அல்லது செல்வாக்கு அடிப்படையில் குற்றவாளிகள் தப்பித்துக்கொள்ளுவதென்பது, வெறுமனே குற்றவாளிகள் தப்பித்துக்கொள்வதுடன் மட்டுப்படுத்தப்படும் விடயமல்ல. மாறாக இந்தக் குற்றவாளிகள் தாம் எவ்வாறு தண்டனைக்குத் தப்பினோம் என்று மார்தட்டி சமூகத்துக்குச் சொல்லும் செய்தி. இது நீதியான சமூகம் உருவாக இருக்கும் சாத்தியத்தை வேரோடு பிடுங்கி எறிகிறது. பொலிஸார் சட்டத்தை கரிசனையுடன் நடைமுறைப்படுத்தியிருந்தால் தண்டனை கிடைக்காமல் போகாது. இது சட்டம் ஒழுங்கை நிலைநாட்டத் தவறிய பொலிஸாரின் கைவண்ணம் என்பது தெளிவாகின்றது.

**இருட்டும் திருட்டும்**

இன்று வடக்கில் மிகப்பெரிய பிரச்சினைகளில் ஒன்று கொள்ளையும் திருட்டும். இதைப் பொலிஸ்துறை சரியாகக் கையாள்கிறதா? சாதுரியமாகக் கையாளுகிறதா? திருடர்களைப் பிடிக்கவேண்டும். மக்களை நிம்மதியாக இரவில் உறங்க விடவேண்டும் என்று மனதளவிலாவது நினைக்கிறார்களா? என்றால் 'இல்லை' என்பதுதான் திட்டவட்டமான பதில். ஒரு பிரதேசத்தில் உள்ள பொலிஸாருக்கு அவர்கள் கடமையாற்றும் பிரதேச வரைபடம் தெரிந்து இருக்கவேண்டும். அத்தோடு 90 வீதம் தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கில் தமிழே தெரியாத பொலிஸார் எவ்வாறு சேவையாற்றுகின்றனர்? இவர்களுக்கு முகவரியையும் பிரச்சினையையும் சொல்லி விளங்க வைக்கும் நேர இடைவெளியில் திருடர்கள் தமது அலுவல்களை முடித்துக்கொண்டு வீடு சென்று உறங்கத் தொடங்குவார்கள். தகுதியற்ற மருத்துவர்கள் எவ்வாறு சிகிச்சை அளிக்கமுடியும்?

**பெற்றோரின் கடமை**

ஒரு பிள்ளை போதைப்பொருளுக்கு ஆட்படுமா என்பது அந்தப் பிள்ளையின் வளர்ப்பில் தங்கியுள்ளது. யாழில் பிறந்து வளர்ந்து பின் உயர்கல்விக்கு ஆண்டாண்டு காலமாக தெற்கிற்கும் பின்னர் உலகெங்கும் சென்றவர்கள் அங்கு போதைக்கு அடிமையாவது இல்லையே. ஏனெனில் பல கெட்ட பழக்கம் உடைய மக்களின் நடுவில் நல்ல மனிதனாக வாழ்ந்து காட்டுதல் என்பது உண்மையில் ஒரு போதை. யாருமே சாதிக்க முடியாததை கல்வியில் தொழில்நுட்பத்தில் சாதித்துக் காட்டுவது ஒரு போதை. யாருக்கும் கிடைக்காத அழகிய தாய்மொழியைப் பேசுவது ஒரு போதை. தமிழன் என்று தலை நிமிர்ந்து நிற்பதே ஒரு போதை. இவ்வாறு கணக்கற்ற போதைகளை நம் கண்முன்னே காட்டினர் நம் முன்னோர்.

**எது கடமை?**

பொலிஸார் தமது கடமைகளைப்பற்றி நினைக்கும் மாதங்களாக மே மாதம், கார்த்திகை மாதம் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இந்த மாதங்களில் பொலிஸ்துறை புதுப்பொலிவு பெற்று உடலில் ஊட்டச்சத்து பெற்று முகமலர்ச்சியுடன் தாம் பொலிஸார் என்ற ஒரு கம்பீரத்துடன் செயற்படுவதை அவதானிக்கமுடிகிறது. மாவீரர்களின் நினைவேந்தல்களிலும் இறந்த மக்களுக்கான அஞ்சலிகளைத் தடைசெய்வதிலும் அவர்கள் இந்தக் கம்பீரத்தையும் பொறுப்புணர்வையும் காண்பிக்கின்றனர். ஆனால் அதே கம்பீரம், முகமலர்ச்சி போதைப்பொருள் கடத்தலை முறியடிக்கவேண்டும் அல்லது திருடர்களைப் பிடிக்கவேண்டும் என்பதில் கொஞ்சம்கூட இருப்பதாகத் தெரியவில்லை.

2009க்கு முன்னதாக வடக்கின் பல பாகங்களிலும் தவறு செய்தால் தண்டனையில் இருந்து தப்பமுடியாது. தண்டனை எப்படியும் கிடைத்தேதீரும், எங்கும் ஒளிக்கமுடியாது என்ற சிந்தனை ஆழப்பதிந்த சமூகமே இருந்துவந்தது. ஆனால் அதன் பிறகு கையூட்டு, சாராயப் போத்தல்கள், சிகரெட்கள் இவற்றின் மூலம் குற்றத்தில் இருந்து தப்பிக்கலாம் என்கின்ற மனோ நிலைமை. அதற்கான விதைகள் வடக்கு எங்கும் தாராளமாகக் விதைக்கப்பட்டு இன்று மரங்களாக யாழ்ப்பாணம் முழுவதும் பல குற்றவாளிகளுக்கு நிழல் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

போதைவஸ்து,லஞ்சம்,தவறான வழியில் பணம் சம்பாதித்தல் இவ்வாறான அத்தனையும் இருக்கும் இடத்தில் நேர்வழியில் செல்லக்கூடிய வழி பிறழாத பயிர்களை உருவாக்கவேண்டும். அவ்வாறான பயிர்களே இந்த மண்ணில் விளைந்தன. இன்னமும் பல நாடுகளில் தங்கள் விளைச்சலை கொடுத்து தாம் சென்ற மண்ணை அலங்கரிக்கின்றன. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர்களுக்கென ஓர் அழகிய உலகு

லக்ஷிகா தர்மராஜா,
நுண்ணுயிரினவியலாளர்

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது, சிறுவர்கள் உடல் ரீதியாக, உணர்வு ரீதியாக, பாலியல் ரீதியாக, மருத்துவ ரீதியாக தவறான நோக்கத்துடன் நடத்தப்படுவதும் சிறுவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யத் தவறுவதாகும்.
சிறுவருடனான பாலியல் ரீதியிலான எந்த ஒரு செயற்பாடும் பாலியல் துஷ்பிரயோகம் ஆகும். பாலியல் நோக்கத்துடனான தொடுகை, உடலுறவு, தொடுகை அற்ற பாலியல் செயற்பாடுகள் (ஆபாசப்படங்கள் காண்பித்தல்) என பாலியல் நோக்கத்துடனான அனைத்துமே எந்தச் சமரசமுமின்றி பாலியல் துஷ்பிரயோகங்களாகவே நோக்கப்படுகின்றன.

**யாரால் ஏற்படுகின்றன?**
சிறுவர் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் பெரும்பாலும் சிறுவர்களுக்கு மிக நெருங்கிய வட்டத்தினராலேயே மேற்கொள்ளப்படுகின்றன.
இவர்கள் உறவினர்களாக, குடும்ப நண்பர்களாக, மிகவும் பழக்கமானவர்களாக இருக்கும் பட்சத்தில் சிறுவர்கள் குழப்பம் அடைகின்றனர். வழக்கமான செயற்பாடுகளில் மந்த நிலை, நடத்தை மாற்றம், நித்திரை கொள்வதில் சிரமம், கெட்டகனவுகள், உடற்காயங்கள், மற்றச் சிறுவர்களுடன் நடந்து கொள்ளும் முறையில் மாற்றம், பாடசாலை செல்வதில் விருப்பம் இன்மை, தற்கொலை எண்ணங்கள் போன்ற அறிகுறிகள் வெளிக்காட்டப்படலாம். ஆனால் இவை துஷ்பிரயோகத்திற்கேற்ப வேறுபடலாம். அதற்காக இவற்றில் சில அறிகுறிகள் காட்டும் அனைத்துச் சிறுவர்களும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் எனக் கூறமுடியாது. மிக இளம் வயதும் அதற்கேற்ற அறிவும் உடைய சிறுவர்கள் பாலியல் ரீதியிலான வெளிக்காட்டல்களால் குழப்பம் அடைகிறார்கள். நடத்தை தவறுகிறார்கள். மேலும் இது கர்ப்பம், பாலியல் நோய்களுக்கும் வித்திடுகிறது. கலாசார சீரழிவான திரைப்படங்கள், பாடல்கள், புரிதல் அற்ற மேலைத்தேய பண்பாடு மற்றும் நவீன கலாசாரமோகம் என்று சிறுவர்களின் உலகைச் சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கின்றது என்றால் அதில் மிகையில்லை.

**சிறுவர்களுடன் உரையாடுங்கள்**
எங்கள் பிரதேசம் மேலைத்தேய சமூகம் போலல்லாது தனித்துவமான குடும்பக் கட்டமைப்புக் கொண்டது. ஆயினும் தற்போதைய அவசர உலகில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுடன் நேரம் செலவழிக்கத் தவறுகிறார்கள். குழந்தைகளின் பிரகாசமான எதிர்காலத்துக்காகக் கடினமாக உழைக்கும் இவர்கள் பிள்ளைகளின் நம்பிக்கையைப் பெறத்தவறுகிறார்கள். பெற்றோர் தங்களது நேரத்தில் சிறிதை ஒதுக்கி பிள்ளைகள் கூறுவதைச் செவிமடுக்கவேண்டும். அவர்களின் அன்றையநாள் எவ்வாறு கழிந்தது என்பதை ஆவலுடன் கேட்டு அறிந்து கொள்ளவேண்டும். சிறுவயதில் இருந்தே ஆரோக்கியமான கலந்துரையாடல் இருக்கும் பட்சத்தில் பிள்ளைகளுக்குப் பெற்றோர் மீது நம்பிக்கை ஏற்படும். பெற்றோர் உண்மையிலேயே தங்களை நேசிக்கிறார்கள் என்பதை சிறுவர்கள் விளங்கிக் கொள்வார்கள். எந்நேரமும் வேலை என ஓடும் பெற்றோரிடம் தங்களது பிரச்சினைகளையும் குழப்பங்களையும் சொல்லச் சிறுவர்கள் முன்வரமாட்டார்கள். எனவே பெற்றோர் தான் ஆரம்பத்தில் இருந்தே குழந்தைகளிடம் பாசத்தையும் பாதுகாப்பு உணர்வையும் தரவேண்டும்.
சிறுவர்கள் பெற்றோரை அணுகும்போது வேலைப்பளுவினால் எரிந்து விழுவதாலும், சிறு தவறுகளுக்குக் கடும் தண்டனை கொடுப்பதாலும், பிரச்சினைகளின்போது சிறுவர்கள் யாரிடம் கூறுவது எனத்தெரியாமல் மனஉளைச்சலுக்கு ஆளாகின்றனர். ஆரோக்கியமான குடும்பச்சூழலில் வளரும் குழந்தைகளே தன்னம்பிக்கையுடனும் சுயமரியாதையுடனும் வளர்கிறார்கள். பெற்றோர் பொது இடங்களில் சிறுவர்கள் மீது எப்போதும் ஒருகண் வைத்திருக்கவேண்டும். பாடசாலையிலும் பிற செயற்பாடுகளிலும் பிள்ளைகள் யாருடன் சேருகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். நம்ப முடியாத சூழலில் சிறுவர் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டியது பெற்றோரின் கடமையாகும்.

**மிகஇலகுவான அணுகல்களை ஏற்படுத்தவேண்டும் பெற்றோர்**
ஒவ்வொரு பெற்றோரும் 'நல்ல தொடுகை கெட்ட தொடுகை' சொல்லித்தரவேண்டும். பிள்ளைகளுக்கு அசௌகரியமான நிலைமைகளின்போது இல்லை, வேண்டாம் என்பதை சொல்லக் கற்றுக் கொடுக்கவேண்டும். அச்சுறுத்தலான நிலைமைகளின்போது நம்பத்தகுந்த வளர்ந்தோரின் உதவியைப் பெற ஊக்குவிக்கவேண்டும். பிரச்சினைகள் ஏதும் ஏற்படும் பட்சத்தில் சிறுவர்கள் உங்களை நம்புவார்கள் - உங்களை அணுகுவார்கள் என்பதை பெற்றோர் உறுதி செய்யவேண்டும்.
தற்போதைய இளம் பெற்றோருக்குத் தேவைக்கு அதிகமாகவே தொழில்நுட்ப அறிவு உள்ளது. ஆகவே சிறுவர்களின் தொலைத்தொடர்புச் சாதனங்களைக் கண்காணிப்பது மிகவும் எளிதான வேலையாகும். சிறுவர்கள் பயன்படுத்தும் வலைத்தளங்கள், இணையத்தினூடான வளங்களைக் கட்டுப்படுத்தும், மேற்பார்வை செய்யும் வசதிகள் வந்து பலகாலம் ஆகிவிட்டது. ஆதலால், கணினி அனைவருக்கும் பொதுவான இடத்தில் இருக்கட்டும். உபயோகிக்கும் வலைத்தளங்கள் பெற்றோர் கட்டுப்பாட்டில் இருக்கட்டும். அயலவர்களிடம் நட்பு பாராட்டுதல் மூலம் ஆரோக்கியமான குடும்பங்கள், ஆதரவான நண்பர்களின் வலையமைப்பை பெற்றோர் உருவாக்கவேண்டும். இவ்வாறான வலையமைப்புச் சரியான வழிகாட்டுதலுக்கும் ஆலோசனைகளுக்கும் உதவிகரமாக இருக்கும்.
தற்போதைய சிறுவர்கள் அதிக உணர்திறன் கொண்டவர்கள். ஆனால் மனதளவில் பலவீனமானவர்கள். எந்த ஒரு பெற்றோரும் தனது குழந்தை நன்றாக இருக்கவேண்டும் என்பதற்காகவே கஷ்டப்படுகிறார்கள்.
எனவே, எந்தவொரு துஷ்பிரயோகமும் சிறுவர்களில் ஏற்படுத்தும் பெரும் வடுக்கள்தான். அது அவர்களது எதிர்காலத்தில் பெரும் மாற்றத்தை உண்டுபண்ணும் என்பதைக் கருத்திற்கொண்டு பெற்றோர் செயற்படுவது மிக அவசியமாகிறது.

## ஏகத்தோடு போகத்தில் விதை விதைத்திடாரோ?

மறந்திட துணிந்து
மறந்து போனேன்.
நேற்று நடந்தது போல
தசாப்தம் கடந்தது.

நிசப்தமாக கிடக்கும்
நினைவுகள் மீள
வெந்த புண்ணில் வேல்
பாச்சி மகிழும் மூடர்.

மௌனமானதே நன்று.
நன்றி சொல்லி கடந்து
நலமே வாழும் எண்ணம்
இன்றும் இல்லை அவ்ரிடம்.

வம்புக்கு சண்டை ஏன்?
புதுமைக்கு எத்தனையோ
முயற்சிகள் இங்கிருக்க
வணங்கிடக் கூட தடையோ?

முடிவுகள் மாறி போக
மூதல் பாதைகள் தங்கள்
திசைகளை மாற்றினால்
நிலைமைகள் தலைகீழாகும்.

தன் பாட்டில் படுத்திருந்த
நாயினைச் சீண்டி
வாங்கிட வேண்டுமோ
அதனிடம் கடிகள் பல.

நிரந்தரமாக நாமிங்கே
ஒற்றுமை மேலோங்கிய
வேற்றுமை நீங்கிட தான்
மகிழ்ந்து வாழ முயலலாமே!

மலையில் கூடிய அந்த
கூட்டம் விதைக்கிறது.
வானில் கூடிய மேகம்
கறுத்து இங்கே மழையாகிட.

பெருவெள்ளம் வந்தால்
எல்லோரும் தான் அதில்
கரைந்து மறைவோம்.
ஏன் இதை மறக்கிறாரோ?

பொறுமை இல்லாத போதும்
வெறுமையாகத் தானே!...
நாட்டில் நாளும் நாம் வாழ
நாடோடி உழைத்திட தானே!...

காற்றேறி கரைகிறோம்.
உறவுகள் வழி பிறக்கும்
அன்பைத் தொலைத்து.
விரக்தியோடு நாளும்.

நாட்டில் ஒரு கூட்டம்
பிழைப்பை மறந்து போடும்.
வெறுத்துப் போக வைத்து
பிழைப்பை கொடுத்திடாதோ?

புத்தருக்கும் சிவனுக்கும்
இருந்ததில்லை சண்டை.
இன்று அவர்களால் ஆகுமோ
நாளை பெரும் போரிங்கே?

புத்திசாலிகளின் மௌனம்
சொல் கேளா மனிதரிடை
வீரம் செறிந்து போகிறது.
மனிதம் மரித்துப் போயிட.

பிழைப்புக்கும் நல்ல
இருப்புக்கும் ஆகாதோ
ஏகத்தோடு போகத்தில்
விதை விதைத்திட சேர்ந்து.

அன்புடன் நதுநசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

இணுவில் தெற்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் சிவனடியான் தயாழினி



மண்ணில் 28.11.1965 — விண்ணில் 31.12.2022


எங்கள் அன்புத் தெய்வம் அம்மா !
ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்களுடன் கூடி வாழ்ந்த காலங்கள்
என்றும் பசுமையானவை.
- உங்கள்
வழிகாட்டல்கள் எங்களை வழிநடத்தும்.

**உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்**

இணுவில் தெற்கு,
இணுவில்.

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம்: 03.01.1967 — மறைவு: 17.12.2023

## நாகையா புவனேஸ்வரன் (தயா)

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் குமரகோட்டம், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நாகையா புவனேஸ்வரன் அவர்கள் கடந்த (17.12.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நாகையா தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னுச்சாமி அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும், விமலராணியின் அன்புக் கணவரும், அக்ஷஜன் (A/L 2024 யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), யதுர்சிகா (O/L 2023 யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாநிதி, கலாநிதி (இலண்டன்), கமலாம்பிகை (இலண்டன்), காலஞ்சென்றவர்களான ராதா, ஜீவன் மற்றும் ஜெயக்குமார் (பிரான்ஸ்), கண்ணன் (பிரான்ஸ்), கோமதி (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நேசரட்ணம், விஜயபாலன், ஜெகதீஸ்வரன், துஷாணி, ஜிந்து, சிவாகரன், பரமேஸ்வரராஜா, செல்வராஜா, செல்வராணி, சந்திரராஜா, புஸ்பராணி, இந்திரராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.12.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.30 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


குமரகோட்டம்,
கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்.
078 911 7314
021 205 3724

(CS 27423) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 10 . 1948



மறைவு 19 . 12 . 2023

## நமசிவாயம் நவரத்தினராசா

**(ஓய்வுபெற்ற உப தபால் அதிபர் - இளவாலை)**

இளவாலை வடக்கு, இளவாலையை பிறப்பிடமாகவும், இணுவில், முத்தட்டு மட வீதி, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் நவரத்தினராசா அவர்கள் நேற்று (19.12.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம், ஸ்ரீமதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், யோகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும், கோகிலவதனி, தர்சிகாயினி, வித்யாதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சசிகாந் (கிராம அலுவலர் - புங்குடுதீவு), கீதாஞ்சலி (VH Surprise Delivery) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹபினேஸ் (மாணவன்), பிரதிக்ஷா (மாணவி), ஆதித்யா (மாணவன்), கேதாரணி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற சண்முகராசா (தபால் ஊழியர்), ஜெயரத்தினராசா (ஓய்வுபெற்ற உப தபால் அதிபர் - மாதகல்), நவயோகராசா (ஓய்வுபெற்ற சாரதி - நீரியல் வள திணைக்களம்), தவயோகராசா (ஓய்வுபெற்ற கிராம அலுவலர் - இளவாலை), சிவயோகராசா (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - நீதிமன்றம், மல்லாகம்), நகுலேஸ்வரராசா (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - பண்டதரிப்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2023) புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று, இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
மகன் 077 300 8584
மருமகன் 077 024 8414

முத்தட்டுமட வீதி, கோண்டாவில். (CR 41352) A-1

# மரண அறிவித்தல்



## திருமதி விமலராணி தங்கராசா

யாழ்ப்பாணம் ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலராணி தங்கராசா அவர்கள் 17.12.2023 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் தவமணி தம்பதியரின் அன்பு மகளும், செல்லத்துரை இரத்தினம் தம்பதிகளின் ஆசை மருமகளும், செல்லத்துரை தங்கராசா அவர்களின் அன்பு மனைவியும், தனுஷா (Magicktech Solutions (PVT) Ltd), தர்ஷிகா (லண்டன்), ஜீரோஜன் (கொழும்பு), ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெகதீபன் (ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ் - சங்கானை), கபிலன் (லண்டன்), சகுந்தலா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், சத்தியபாலதேவி (கொழும்பு), தேவராணி (கனடா), சுகிர்தராணி (அமரர்), பிறேமாராணி (கொழும்பு), மாலினிதேவி (லண்டன்), தவபாலசிங்கம் (லண்டன்), பாலகுமார் (லண்டன்), சதீஸ்குமார் (ஜேர்மன்), ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஞானப்பிரகாசம் (கொழும்பு), நாகேஸ்வரன் (கனடா), ராஜேந்திரன் (லண்டன்), வசந்தமலர் (லண்டன்), கயிலினி (லண்டன்), வனிதா (ஜேர்மன்) ஆகியோரின் மைத்துனியும், பரிமளகாந்தி - பரராசசிங்கம் (நெதர்லாந்து), விமலராசா - ஞானேஸ்வரி (அமரர்கள்), ஜெயராசா - புஸ்பராணி (நெதர்லாந்து), புஸ்பகாந்தி - கந்தவேள் (நெதர்லாந்து), லோகராசா - பானுமதி (நெதர்லாந்து), ஜெயகாந்தி (நெதர்லாந்து) - பாலசந்திரன் (அமரர்) ஆகியோரின் பாசமிகு அண்ணியும், ரிஸ்மியா,மகனியா, சாகித்யா, சாருகா, திவ்யன், கிஸ்மிதா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.12.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் காக்கை தீவு கரையான்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தங்கராசா (கணவர்) - 077 816 1169
ஜீரோஜன் (மகன்) - 077 581 8758
ஜெகதீபன் (மருமகன்) - 077 949 1053
பாலகுமார் (தம்பி) - 00447960956043
லோகராசா (மைத்துனர்) - 0031612555737

(CS 27426) S-1

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்வரும் நத்தார் /வருடப்பிறப்பை முன்னிட்டு....

# புத்தம் புதிய தெரிவுகளுடன்

# வாணி ரெக்ஸ்



- திருமண பட்டுச்சாறி வகைகள்
- பூப்புனித நீராட்டு விழா சாறி வகைகள்
- பிறந்த நாள் விழாக்களுக்கான பாட்டி புறக் மற்றும் மொடல் கவுண் புதிய தெரிவுகள்
- அரச, தனியார் ஊழியர்களுக்கான ஒரே நிறத்திலான சாறி வகைகள்
- இந்தியாவில் இருந்து உடனுக்குடன் வெளிவந்த ஒன்லைன் சாறி வகைகள்
- புதிய வகை சல்வார் / லெகங்கா / மஸ்தானி ஆடை வகைகள்
- ஆண்களுக்கான அனைத்து வகையான புதிய வகை ஆடைகள்
- சிறுவர்களுக்கான ஆடைகள்

அத்துடன்.....
வெளிநாட்டிற்கு செல்பவர்களுக்கான தரமான

- *Jacket* (ஆண் / பெண் / சிறுவர்கள்)
- *Sweatter* வகைகள்
- பிளாங்கற் வகைகள்
- கோட் சூட் (ஆண் / பெண்)
- *Cap* / மௌப்ளர் வகைகள்
- *Luggage Bag*

அனைத்தையும் **விசேட விலைக்கழிவில்** பெற்றுக்கொள்ளலாம்

## வாணி ரெக்ஸ்

No-81, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5578, 021 222 9286, 077 748 8093

# மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்





எமது வித்தியாலயத்தில்
மணிவிழாக் காணும் எங்கள் உபஅதிபர்

**திரு. சுப்பிரமணியம் கோடீஸ்வரன்**

BA Hons (Econ), PGDE, MA (DEV.STU), M.Ed

எமது கல்லூரியில் உப அதிபராக சேவையாற்றி **இன்று (20.12.2023) புதன்கிழமை சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச்செல்லும்** அவரின் அர்ப்பணிப்பான சேவையை பாராட்டுவதுடன் ஓய்வுக்காலம் மேலும் சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

- யா / வரணி மத்திய கல்லூரி - 1988.08.17 - 1999.08.31 (ஆசிரியர்)
- யா / வரணி மத்திய கல்லூரி - 1999.09.01 - 2012.01.15 (உப அதிபர்)
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - 2012.01.16 - 2013.06.30 (கல்வி முதுமாணி முழுநேர மாணவன்)
- யா/ இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் - 2013.07.01 - 2017.01.01 (அதிபர்)
- யா / மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம் - 2017.01.02 - 2023.12.20 (உப அதிபர்)

(cr.41343) N.1)

வாழ்த்துவோர்
பாடசாலைச் சமூகம்
யா/ மீசாலை விக்கினேஸ்வர மகாவித்தியாலயம்.

# தசாக கிருஹயக்ஞ அழைப்பு

நிகழும் சோபகிருது வருடம் கார்த்திகை திங்கள் 26 ஆம் நாள் (12.12. 2023) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

**அமரர் ஸ்ரீமதி இந்திராட்சி பஞ்சாபகேச சர்மா**

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்

- 21.12.2023 - வியாழக்கிழமை காலை - 10.00 மணிக்கு தசாகம்
- 22.12.2023 - வெள்ளிக்கிழமை ஏகோதிஷ்டம், மாசிகம்
- 23.12.2023 - சனிக்கிழமை சபிண்டீகரணம்
- 24.12.2023 - ஞாயிற்றுக்கிழமை சமாராதனை (மதியபோசனம்)

மேற்படி தினங்களில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் 24.12.2023 ஞாயிற்றுகிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கத் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுவருகைதரவும்)

சிவன்கோயிலடி,
ஆவரங்கால்


குடும்பத்தினர்.
021 205 8104

(cr 41350) N - 1)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த (20.11.2023) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**கலாபூஷணம் அமரர் இராசையா பீதாம்பரம் (பற்குணம்)**



தோற்றம் 21.03.1932
மறைவு 20.11.2023

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (20.12.2023) புதன்கிழமை **சேர் பொன் இராமநாதன் வீதியிலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ், நாச்சிமார் கோவிலடி)** நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுவருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்

"சாயி போட்டோ"
1010/11, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

(cs 53203) (N.1)

குடும்பத்தினர்

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 . 03 . 1955



மறைவு 10 . 01 . 2022

கொக்கிளாய் முல்லைத்தீவை பிறப்பிடமாகவும் தண்ணீரூற்று முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் வீரவாகு இரத்தினசிங்கம்**

**திதி: பூர்வபக்க அட்டமி [20.12.2023]**

ஆண்டுகள் இரண்டு ஆயிடினும் அன்பு முகம் மறக்கவில்லை என்றும் உம்
நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டா மணி விளக்காய் ஒளி வீசிப் பிரகாசித்தீர்
இன்று வேண்டித் துதித்தே இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

தண்ணீரூற்று,
முள்ளியவளை.

(cs 53204) (N.1)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்


பாடசாலையின் வீதி, வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவை வதிவிடமாகக் கொண்ட **ராஜரத்தினம் யோகராஜா** ஆகிய நான் எனது பெயரை **காளிமுத்து யோகராஜா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **காளிமுத்து யோகராஜா** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோஷலிச குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

**காளிமுத்து யோகராஜா**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 13 - 06 - 1925

இறைவன் அடியில் 10 - 01 - 2022



### அமரர் கந்தையா கனகசபை

(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)

**திதி: அட்டமி (20.12.2023) புதன்கிழமை**

ஆண்டு இரண்டு ஆனபோதும் அப்பா
உங்கள் நினைவுகள் ஆறவில்லை
எம்துயர் எத்தனை ஆண்டுகள்
சென்றிடினும் உங்கள் நினைவுகள்
எங்கள் மனதில் நீங்காது நிலைத்திருக்கும்
அப்பா உங்கள் ஆத்மா சாந்தி அடைய ஐயனார்
பெருமானையும், வயிரவப் பெருமானையும் வேண்டி
நிற்கின்றோம்.

**சுளானை,**
**வைரவர் கோயிலடி,**
**சுன்னாகம்.**

(cs.27406) (N.1)

என்றும் உங்கள் நினைவுடன்
**குடும்பத்தினர்.**

## நெஞ்சை விட்டகலாத 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**மண்மகிழ 08.06.1950**

**கண்ணநெகிழ 20.12.2013**



அமரர் திருமதி

### கனகரஞ்சினி திருலோகசிங்கம்

பஞ்சரைப் பெற்றெடுத்துப் பாசத்துடன் அரவணைத்து
அரும்பாடுபட்டு எம்மை ஆளாக்கி வாழ்வின் வழிகாட்டியாய்
எம்மை வாழவைத்த அன்புத் தாயே!

ஆண்டுகள் பத்து ஆனதம்மா ஆறவில்லை எங்கள் மனம்
ஆயிரம் உறவுகள் அரவணைக்க இருந்தாலும்
அம்மா உங்கள் அன்புக்கு ஈடாகுமா....

நித்தமும் உங்களை நினைத்து நிழல் தேடி அலைகின்றோம்
நிலையில்லா இவ்வுலகை விட்டு நீள்துயில் கொண்ட
உங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

**உங்கள் நினைவுகளோடு வாழும்**
**குடும்பத்தினர்**

(cs.27418) (N.1)

# பொதுச்சபைக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

யாழ்ப்பாணம், டிசெ. 20

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச்சபையின் வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டமும் புதிய இயக்குநர் சபைத் தெரிவும் கடந்த வியாழக்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் தலைவராக க.மகாதேவன், உபதலைவராக ப.கேசவதாசன் மற்றும் நா.கணேசன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.


உறுப்பினர்களாக திருமதி வே.செல்வரத்தினம், இ.அ.ஆனந்தராஜா, செ.ஜெயக்குமார், சோ.கௌரிதாசன், எ.குகதாசன், சி.சிவகுமார், க. இராஜசந்திரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-17)

## விற்பனைக்கு

வவுனியா, யாழ்ப்பாணம், நல்லூர்க்கோவிலை அண்டிய பகுதி, கோண்டாவில், A9 வீதி ஆகிய பகுதிகளில் காணி, வீடு, கடை என்பன விற்பனைக்கும் வாங்குவதற்கும் உண்டு.

தொடர்பு: 077 522 1132
077 285 4626
VIMB, பங்களாவடி. (வேலணை)

## காணவில்லை



### கார்த்திகேசு லோகேஸ்வரன்

என்பவரை **11.12.2023** முதல் காணவில்லை. இவரைக் கண்டவுடன் கீழ் உள்ள இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். **075 577 3428**

## முழுநேர / பகுதிநேர வேலைவாய்ப்பு

**இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**அடிப்படைத் தகைமைகள்**

- ✓ G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி
- ✓ 18 - 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்

**தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக்கோவையை (Bio Data) கீழ்வரும் Whatsapp இலக்கத்துக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்**

**Whatsapp : 077 756 3781**
**jenyjude77@yahoo.com**

## மரண அறிவித்தல்



தோற்றம் 19.11.1941 மறைவு 19.12.2023

### முருகன் நடேசன்

**(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய உத்தியோகத்தர் -சாவகச்சேரி)**

மட்டுவில் வடக்கு சந்திரபுரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட முருகன் நடேசன் நேற்று (19.12. 2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், ஜெயகாந்தன், ஜெயகௌரி, அமரர் ஜெயந்தன், ஜெயகாந்தரூபி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமலினி, அருளானந்தம், விமலதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெனா, மது, இசை, திவி, திகழ், பிரகாஸ் ஆகியோரின் அன்பு பேரனும், அன்சிகாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2023) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மட்டுவில் வடக்கு,**
**சந்திரபுரம்.**

(CS 27427 )A-1

**தகவல்: குடும்பத்தினர்.**
**075 393 0063**

## தறப்பாள் கையளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.20

மாந்தை கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் வசிக்கும் மழையால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு 15 தறப்பாள்கள், சுதர்சன் பவுண்டேஷன் அனுசரணையுடன் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ரி-75)



## சஞ்சிகை வெளியீடும் பரிசளிப்பு நிகழ்வும்



வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வும் 'பிரகாசம்' சஞ்சிகை வெளியீடும் கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரி முதல்வர் திருமதி பா.கமலேஸ்வரி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ் பங்கேற்றார்.

நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் சிறப்புற்றன. (ச-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறையில் கூடியமழைவீழ்ச்சி

நேற்றுமுன்தினம் காலை 8.30 மணி முதல் நேற்றுக்காலை 8.30 மணி வரையான 24 மணிநேரத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பருத்தித்துறையில் கூடியளவு மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.
இதன்படி 146.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பருத்தித்துறையில் பதிவாகியுள்ளது என்று திருநெல்வேலி வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.
குறித்த காலப் பகுதியில் யாழ்.தெல்லிப்பழையில் 140.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், தொல்புரத்தில் 124.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், அச்சுவேலியில் 115.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், மீசாலையில் 49.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், சாவகச்சேரியில் 46.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்.நகரத்தில் 45.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், திருநெல்வேலியில் 43.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்ப்பாணம் கோட்டையில் 38.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், வடமராட்சி அம்பனில் 33.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-ம-66)


# தெல்லிப்பழை வாள்வெட்டு: வாகனச்சாரதி கைதானார்

யாழ்ப்பாணம், டிசெ. 20
தெல்லிப்பழைப் பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலுக்கு உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டில் வாகனச் சாரதியொருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதானவர் புதுக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-23)

# யாழ்ப்பாணப் பல்கலை மாணவன் போதை மாத்திரைகளுடன் கைது!

## தென்னிலங்கையைச் சேர்ந்தவர்

யாழ்ப்பாணம், டிசெ. 20
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவரொருவர் போதை மாத்திரைகள் மற்றும் தடைசெய்யப்பட்ட லேகியப் பைக்கற்றுக்களுடன் நேற்றுக் கைது செய்யப்பட்டார். தென்னிலங்கையைச் சேர்ந்த அவர் தங்கியிருந்த அறையில் இருந்து மேற்படி போதைப்பொருள்கள் மீட்கப்பட்டன.
விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய மேற்கொண்ட நடவடிக்கையின்போதே அந்த மாணவன் கைது செய்யப்பட்டார்.
சந்தேகநபர் கோப்பாய் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டதையடுத்து மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-125)



# குடும்பத் தகராறு வாள்வெட்டில் முடிந்தது

வடமராட்சிகிழக்கு, குடத்தனை - மாளிகைத்திடல் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாள்வெட்டில் குடும்பத் தலைவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
குடும்பத் தகராறு காரணமாக இரு தரப்பினரிடையே நிலவிவந்த முரண்பாடு வாள்வெட்டில் முடிந்துள்ளது என்று பொலிஸார் முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்தனர்.
காயமடைந்தவருக்கு தலை மற்றும் காலில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிகவிசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-100)

## பாலியாற்றுத்...

வடக்கு மக்களின் நீண்டகால குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொருட்டு பாலியாற்று நீர் வழங்கல் திட்டத்தை முன்னெடுக்கும் முக்கியமான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.
வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன், நீர்ப்பாசன நீர்வழங்கல் முகாமையாளர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.
பாலியாற்று குடிதண்ணீர் திட்டத்துக்காக 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-27-125)

## வடக்குப்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் எதிர்வரும் வியாழக்கிழமை (நாளை) டெங்குஒழிப்புத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். சிரட்டைகள், பேணிகள், நீர் தேங்கும் இடங்கள் என்பவற்றை அகற்றுவதன் மூலம் டெங்கு பரவாமல் தடுப்பதற்கான வழிகளை மேற்கொள்வதுடன் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் அன்றையதினம் மேற்பார்வையில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (அ-ம-125)

## குளிர்...

யாழ்ப்பாண மாவட்டத்தில் பெய்துவரும் மழை காரணமாக 435 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 523 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 24 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்தார்.
சங்கானைப் பிரதேச செயலகப் பிரிவில் 214 குடும்பங்களைச் சேர்ந்த 267 பேரும், பருத்தித்துறைப் பிரதேச செயலகப் பிரிவில் 146 குடும்பங்களைச் சேர்ந்த 485 பேரும், சாவகச்சேரிப் பிரதேச செயலகப் பிரிவில் 60 குடும்பங்களைச் சேர்ந்த 205 பேரும், கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேரும், உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். சாவகச்சேரிப் பிரதேச செயலகப் பிரிவில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 46 பேர் அன்னை முன்பள்ளி நிலையத்தில தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வடமராட்சிவடக்கு பிரதேசத்தில் 312 குடும்பங்களை சேர்ந்த 712 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வன்னிபெருநிலப்பரப்பில் மழையின் தாக்கம் சற்றுக் குறைந்தாலும் வீடுகளுக்குள் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. வெள்ளத்துடன் பாம்புகள் உள்ளிட்ட விஷ விலங்குகளும் வீடுகளுக்குள் புகுந்துள்ளதால் மக்கள் உயிரச்சத்துடன் இருக்கும் நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர். (அ-ம-20-125-100)

## ரயிலில்...

உயிரிழந்தார். நடராசா பிறையழகன் (வயது-23) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
கிளிநொச்சி, ஆனந்தபுரம் பகுதியில் உள்ள ரயில் கடவையில் நேற்றுமாலை 5 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் அவர் உயிரிழந்தார். இறந்தவரின் சடலம் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113)

## பலாலியை...

திரும்பிச் சென்றது. குறித்த பயணிகள் விமானத்தைப் பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய ஓடுதளத்தில் தரையிறக்குவதற்குப் பல தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் அது பயனளிக்காத நிலையில் விமானம் மீண்டும் சென்னை விமான நிலையத்தை நோக்கித் திரும்பிச் சென்றது. (அ-ம-66)

## ரணில்...

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளார். ஜனாதிபதித் தேர்தலுக்காகத் தனக்கு ஆதரவு திரட்டும் நடவடிக்கையில் ஈடுபடுமாறு தனக்கு நெருக்கமான அமைச்சர்களிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-ம-44)

## பச்சிளம்...

வீடு திரும்பியுள்ளனர். நேற்றுமுன்தினம் சிசுவின் உடல் திடீரெனக் குளிர்ந்துள்ளது. அத்துடன், இளம் சிவப்புப் புள்ளிகளும் உடலில் தோன்றியுள்ளன.
இதையடுத்து, தனியார் மருத்துவமனையில் (சிசு பிறந்த மருத்துவமனை) சிகிச்சைக்காகச் சிசு சேர்க்கப்பட்டுள்ளது. அங்கு முதற்கட்ட சிகிச்சைகளின் பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மாற்றப்பட நிலையில் அங்கு சிகிச்சை பயனளிக்காமல் சிசு உயிரிழந்துள்ளது.
இறப்புத் தொடர்பான விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

## ஜனவரி...

2ஆம் திகதி வழங்கப்படும் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது.
வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அலெக்ஸ், சித்திரவதைகளுக்குள்ளான நிலையில் கடந்த நவம்பர் மாதம் 19ஆம் திகதி உயிரிழந்தார்.
இதுதொடர்பான வழக்கு விசாரணைகள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் இடம்பெற்று வருகின்றது. மேற்படி வழக்கு நேற்றையதினம் மீண்டும் விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
இதன்போது, வட்டுக்கோட்டைப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் குறித்த இளைஞனை மல்லாகம் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்டவர்கள் தமது சாட்சியங்களைப் பதிவு செய்தனர். தொடர்ந்து, தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைச் சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இளைஞனை அனுமதித்துச் சிகிச்சை வழங்கிய மருத்துவ அறிக்கையையும் மன்றில் சமர்ப்பிக்க ஆவன செய்யுமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு நீதிவான் உத்தரவிட்டார். இதையடுத்தே, குறித்த மரண விசாரணை தொடர்பான கட்டளை எதிர்வரும் ஜனவரி மாதம் 2ஆம் திகதி வழங்கப்படும் எனத் தெரிவித்த நீதிவான் வழக்கை ஒத்திவைத்தும் உத்தரவிட்டார். (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கட்டடத்துக்கு நிதிவிடுவிப்பில் அரசியல்

## வவு. அல் – அக்ஷா மாணவர்கள் போராட்டம்

**வவுனியா, டிசெ. 20**

**வவுனியா, சாளம்பைக்குளம் அல்- அக்ஷா பாடசாலையின் கட்டடத்துக்கு அரச நிதி ஒதுக்கீட்டில் நான்கு வருடங்களுக்கு முன் அடிக்கல் நடப்பட்டபோதும் அதற்குரிய நிதி கிடைக்கவில்லை என்று தெரிவித்துப் பாடசாலை மாணவர்கள், பெற்றோர் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



இந்த ஆர்ப்பாட்டம் பாடசாலைக்கு முன்பாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

'கல்வியில் அரசியல் கலக்காதே', 'அரச நிதியைத் தடை செய்யாதே', உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் அசாதாரண நிலை காரணமாக கட்டடப் பணிகள் இடைநிறுத்தப்பட்டு ஒதுக்கப்பட்ட நிதி திருப்பி அனுப்பப்பட்டது. தற்போது முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வேண்டுகோளுக்கமைய மீண்டும் நிதி விடுவிக்கப்பட்டபோதும் அந்த நிதி கிடைக்கப்பெறுவதில் தடையேற்படுத்தப்பட்டுள்ளது. இடைநிறுத்தப்பட்ட நிதியை விடுவித்து பாடசாலைக் கட்டட வேலையை மீண்டும் தொடர அனுமதிக்கவேண்டும்- என்றனர். (ச-110)

## நினைவேந்தல்



யாழ்ப்பாணம், டிசெ. 20

இலங்கை முதல் உதவிச் சங்கம் இந்து சமயத் தொண்டர் சபையின் ஸ்தாபகரும் பிரதம ஆணையாளருமாகிய அமரர் தம்பு நாகேந்திரம் போஜனின் 12 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி, பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. (ரி-159)

## புசாந்தன் சாதனை!



மலேசியாவில் இடம்பெற்ற ஏசியன் கிளாசிக் பவர்லிப்ரிங் சம்பியன்ஷிப் - 2023 போட்டியில் சாவகச்சேரி கோவில் குடியிருப்பைச் சேர்ந்த ச.புசாந்தன் இலங்கை தேசிய பளுதூக்கல் அணிசார்பாக பங்குபற்றி இரண்டு வெள்ளிப் பதக்கங்களைத் தனதாக்கியுள்ளார். (ச-9)

## கட்டடத் திறப்புவிழா!

முல்லைத்தீவு - கரைதுறைபற்று, வற்றாப்பளை கிராமத்தில் பிரதேசத்துக்கும் மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்த மறைந்த வீரர்கள் நினைவாக அமைக்கப்பட்ட கட்டடத்திறப்பு நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் சட்டவாளரும் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதியுமான த.கெங்காதரன், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ந.முகுந்தன், முல்லை. வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் கோரஸ் டிலான் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாகவும், வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத் தலைவரும் ஓய்வுநிலை அதிபருமான மு.குகதாசன், வற்றாப்பளை மகாவித்தியாலய அதிபர் க.திருக்குமரன், வற்றாப்பளை கிராமஅலுவலர் சீ.யேசுரட்ணம் ஆகியோர் விருந் தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் விளையாட்டுக் கழகத்தினரால் "தடங்கள்" நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (ரி-19)





## உலருணவு கையளிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 20

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் இரு கிராமங்களில் மழை வெள்ளம் வீடுகளுக் குள் புகுந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

'வலுவிழந்தோரைத் தாங்குவோம்' சுவிஸ் அமைப்பால் அனிஞ்சியன்குளம், அம்பாள்குளம் கிராமங்களில் வசித்துவரும் 25 குடும்பங்களுக்கே அவை கையளிக்கப்பட்டன. (ச-13)

## சட்ட விரோத மணல் அகழ்வுகள் டிப்பர் சாரதிகள் நால்வர் கைது

கிளிநொச்சி, டிசெ. 20

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டமை, போலியான மணல் அகழ்வு அனுமதிப்பத்திரத்தை வைத்து மணல் அகழ்வில் ஈடுபட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் டிப்பர் சாரதிகள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தருமபுரம் - கல்லாறுப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக வழங்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து அந்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இரண்டு டிப்பர் சாரதிகள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் போலியான அனுமதிப் பத்திரத்தை வைத்து மணலை ஏற்றியமையும் தெரியவந்தது.

விசுவமடுப் பகுதியில் மணலுடன் சென்ற இரண்டு டிப்பர்கள் சோதனையிடப்பட்டதில், அவற்றில் அனுமதிப் பத்திரத்துக்கு முரணாக மணலேற்றப்பட்டமை தெரியவந்தது. இதையடுத்து அந்த டிப்பர்களின் சாரதிகளும் கைதுசெய்யப்பட்டனர். (ம-113)

## ஐஸ் வைத்திருந்தவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 20

ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த இளைஞரொருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

தருமபுரம் பகுதியில் வீதிச்சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி நபரை வழிமறித்துச் சோதனையிட்டபோதே அவர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார். (ம-113)



## நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் நடிகை ரம்பா நேற்று வழிபாடு

யாழ்ப்பாணம், டிசெ. 20

யாழ். வருகை தந்துள்ள தென்னிந்தியத் திரைப்பட நடிகை ரம்பா, வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று அங்கு வழிபாடுகளில் ஈடுபட்டார். (ம-66)

மணமகள் தேவை

1984 இல் பிறந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்பார்வையற்ற நிரந்தவருமானம் சொந்த வீடும் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

Viber or Whatsapp

0044 757 862 6565, 077 251 9150

Email add: rajasasikumar@gmail.com



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org